# எழுநிலம்

மாத இதழ் | மனம்- 3 | ஜூன் 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052

## சீனப் பொறிக்குள் சீலங்கா





## சிவகுமாரனும் தமிழ் மாணவர் பேரவையும்





ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து.

# எழுநிலம்

ஜூன் 2021

தொடர்புகளுக்கு:
ezhunilam@yahoo.com

## திருக்குறள்



**குறள்**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி
ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து.

**உரை**

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

### ஆசிரியர் பக்கம்

## சிந்திப்போம் விரைந்து செயலில் இறங்குவோம்

தரப்படுத்தலை எதிர்த்து 'தமிழ் மாணவர் பேரவை' யுடன் கைகோர்த்து பல்வேறு போராட்டங்களை நடத்தி, மாணவர் சமூகத்தின் எழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்தவர்களில் முக்கியமானவர் தியாகி பொன் சிவகுமாரன். பின்னாளில், ஈழவிடுதலைப் போராட்டத்தின் முதலாவது ஆயுதம் தாங்கிய தாக்குதலை நடத்திய பெருமைக்குரியவரும், எதிரியிடம் உயிருடன் பிடிபட்டுவிடக் கூடாது என்ற வைராக்கியத்துடன் சயனைட் அருந்தி ஈக வரலாற்றைத் தோற்றுவித்தவருமான இந்தத் தியாகி மறைந்து (ஜூன் 5 உடன்) 47 வருடங்களாகின்றன. இந்த நேரத்தில் இன்றைய மாணவர் சமுதாயத்தின் நிலை குறித்துப் பேச வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. ஈழ வரலாற்றில், மாணவர்களைக் குறி வைத்து இனவாதிகள் செய்து கொண்டிருக்கும் அநீதிகள் எண்ணிலடங்கா. ஏனைய அடக்கப்படும் இனங்களைப் போல, தமிழர் வரலாற்றிலும், சமூக விழிப்புணர்வுடன் இயங்கும் மாணவர் சக்தி ஒரு மாபெரும் சக்தியாக இனம் காணப்படுகிறது.

வடக்கு, கிழக்கிலிருந்து சில மாணவர்கள் கல்வியில் சிறப்புத் தேர்ச்சியடைந்து சாதனையாளர்களாக இனம் காணப்பட்டுள்ளமை மகிழ்ச்சியே. அவர்களின் கடின உழைப்பிற்குக் கிடைத்த வெகுமதி இது. இவர்கள் வெறும் விரல்விட்டு எண்ணக் கூடியளவு சொற்பளவினர்தான். ஒட்டு மொத்தமான தமிழ் மாணவ சமூகம் இன்று எதை நோக்கிச் செல்கிறது? இவர்களின் இலக்குத்தான் என்ன? தாயகத்தில், எதிரியால் திட்டமிட்டுப் புகுத்தப்பட்ட பாக்கு, கஞ்சா, கசிப்பு, நீலப்படம், வாள் வெட்டு என்ற சீரழிவுக் கலாச்சாரத்தினுள் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது எமது இளம் தலைமுறை. இன்னுமொருபுறம், ஆரம்பக் கல்விக்காக பாடசாலையில் இணையும் மாணவர் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி என்ற அதிர்ச்சித் தகவல். திட்டமிட்ட வகையில் எமது இளம் சந்ததியைச் சிதைப்பதனூடாக தமிழினத்தை அடியோடழிக்கும் நீண்ட காலத் திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்துகின்றான் எதிரி. மண், மொழி, கலாச்சார அழிப்பு, இளம் தலைமுறையைச் சிதைப்பதன் மூலம் செயற்திறனற்ற , ஆளுமையற்ற தமிழ் சமூகத்தைத் தோற்றுவித்தல் என்று திட்டம்போட்டு இனவழிப்புத் தொடர்கிறது.

இவற்றைத் தடுத்து, இளம் தலைமுறையை வழிநடத்த நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? முக்கியமாக புலம் பெயர் தேசங்களில் பரவிக் கிடக்கும் இலட்சக்கணக்கான தமிழர்களின் பங்கு என்ன? இனியும் தாமதிக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது தமிழர்கள் அனைவரினதும் கட்டாயக் கடமையாகின்றது. சிந்திப்போம் விரைந்து செயலில் இறங்குவோம்.

# சீனப் பொறிக்குள் சுழலும் சீலங்கா




## சீன முதலையின் வாய்க்குள் சிங்கத்தின் தலை வசமாகச் சிக்கிவிட்டது

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பையும், சுற்றுச் சூழல் - சமூக ஆர்வலர்களின் கடுமையான, 19 இற்கும் மேற்பட்ட மனுக்களையும், சிங்கள மக்களின் விசனங்களையும் புறந்தள்ளி, உட்பிரிவுகளில் செய்யப்பட்ட சில சிறிய மாற்றங்களுடன், இலங்கையின் சிறப்புப் பொருளாதார மண்டலமான ‘துறைமுகநகர்’ ( Port City ) இற்கான மசோதா நாடாளுமன்றில் பெரும்பான்மை பெற்றிருக்கிறது. 149 இற்கு 58 என்ற பெரும்பான்மையுடன் நிறைவேறிய இந்த மசோதா, அலங்கார வார்த்தைகளால் சிங்களர்கள் திருப்திப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்பதையும், சீன முதலையின் வாய்க்குள் சிங்கத்தின் தலை வசமாகச் சிக்கிவிட்டது என்பதையும் உறுதி செய்கிறது.

பல பில்லியன் டாலர்களை சீனாவிடம் கடனாகப் பெற்று, சீனக் கட்டுமானக் கம்பனியின் துணையுடன் இந்த 665 ஏக்கர் மீட்கப்பட்ட நிலம் துறைமுக நகராகின்றது. இதற்காக, கிட்டத்தட்ட 121 ஏக்கர் நிலத்தினை இலவசமாக ( free hold ) சீனாவுக்கு கொடுப்பதாக 2014 இல் மகிந்த ராஜபக்சவினால் எழுதப்பட்ட ஒப்பந்த நிலையை மாற்றி, 153 ஏக்கர் நிலப்பரப்பை 99 ஆண்டுகாலத்திற்கு சீனாவிற்குக் குத்தகைக்கு விடுவதான புதிய தீர்மானம் சிங்களர்களைத் திருப்திப்படுத்தியிருக்கக் கூடும். ஏற்க-



**விடுதலைப் போராட்ட காலத்தில்**
**தலைவர் பிரபாகரனின்**
**கட்டுக்கோப்பான வழிநடத்தல்**
**அந்நிய அத்துமீறலை முற்றாகத் தடுத்து**
**நிறுத்தியிருந்ததும்,**
**விடுதலைப் போராட்ட காலத்தில்**
**எந்தவொரு நாட்டினாலும்**
**சிங்கள இறைமையைக் கூட**
**சிதைக்க முடியவில்லை என்பதும்**
**குறிப்பிடப்பட வேண்டியது**

னவே, தன் மூதாதையர் வாழ்ந்த நிலமான அம்பாந்தோட்டையை வளமாக்கி சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்காக என்று, ஏற்கனவே இருந்த 4.5 பில்லியன் கடன் பழுவையும் மீறி சீனாவிடம் கடன் பட்டது ராஜபக்ச குடும்பம். அந்தக் கடனை மீளச் செலுத்தமுடியாத நிலையில், 2017இல் அம்பாந்தோட்ட துறைமுகத்தை 99 வருட கால குத்தகைக்கு சீனாவிடம் கையளித்திருக்கிறார்கள்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்ட விமான நிலையம் நாளொன்றுக்கு ஒரேயொரு விமானத்தை மட்டுமே இறக்குவதும், விஸ்தரிக்கப்பட்ட அம்பாந்தோட்ட வைத்தியசாலை சீன தொழிலாளிகளின் தங்குமிடமாக மட்டுமே மாறியிருப்பதும் வளப்படுத்தலின் விளைவுகளை வெளிச்சம் போடுகின்றன. குத்தகைப் பணம் 1.4 பில்லியன் இவ்வாறு மாயமாகிப் போக, கடன் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. இப்போது மீண்டும் பல பில்லியன்களுக்கு சீனாவிடம் கையேந்தி கடனாளியாகின்றது இலங்கை.

ஏற்கனவே, சீனாவின் 'கடன் பொறி இராசதந்திரம்' உலகின் முக்கியமான பேசு பொருளாகவுள்ளது. பலம் பொருந்திய நாடுகள் என்று சொல்லப்படுபவை இதனைக் கவலையுடன் அவதானிக்கிறார்கள். சர்வதேச நாணய நிதி நிறுவனமோ இத ஒரு 'கொள்ளையடிக்கும் கடன்' என விமர்சிக்கிறது. கென்யா, தென்னாபிரிக்கா, நைஜீரியா, சாம்பியா, ஜிபுட்டி, காங்கோ, எகிப்து, ஆர்ஜென்ரீனா, ஈக்வடார், வெனிசுவெலா என்று 8 நாடுகள் சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கி மீளமுடியாதிருக்கின்றன. அதிலும் பிரதானமாக, ஜிபுட்டியில், சீனாவினுடைய முதலாவது வெளிநாட்டு இராணுவத்தளம் அமைக்கப் பட்டிருப்பதிலிருந்து கடன் பொறியின் ஆபத்து உணரப்பட்டுள்ளது. பாகிஸ்தான் சீனாவிடம் பெற்ற கடனை மீளளிக்க முடியாமல் அது சர்வதேச நாணய நிதி நிறுவனத்தை நாடியதும், அது தொடர்பாக வாஷிங்டனின் செல்வாக்கில் இன்றுவரை பாகிஸ்தான் இருப்பதும் விளைவுகளின் பாரதூரத் தன்மைக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு.

துறைமுக நகரினால் தமிழர்களுக்கு நன்மை ஏதும் விளையப் போவதில்லை. பல இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள், வணிகம், மற்றுமொரு துபாய் – சிங்கப்பூர் என்ற அலங்கார வார்த்தைகளுக்கு அப்பால், தமது இறையாண்மைக்கு ஆப்பு வைக்கப்பட்டிருப்பதை சிங்கள மக்கள் உணரத்தான் போகிறார்கள். திருப்திப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட சிறிய சலுகையையும் மீறி, மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்ததை உணர்வார்கள்.

சூழல் மாசு தவிர்க்க முடியாததாகும். பனிப்போர் காலத்தில் இலங்கை – அமெரிக்கக் கூட்டு இந்தியாவை எப்படி தமிழ் ஆயுதக்குழுக்களின் தோற்றுவாய்க்கும் வளர்ச்சிக்கும் துணைபோக வைத்ததோ அதே நிலைக்கு அரசு மீண்டும் தன்னைத் தள்ளியுள்ளது என்ற எச்சரிக்கையும், மீண்டும் புவிசார் - அரசியல் ஒழுங்கைப் பேணி அதனது பாதுகாப்பை உறுதிசெய்ய இந்தியா எந்த நிலையும் எடுக்கக்கூடும் என்ற ஐயப்பாடும் எழுப்பப்பட்டுள்ளது. எதிர்வினையாற்ற வேண்டிய இந்தியா தற்காலிக மௌனம் சாதிக்கிறது. ஜெய்சங்கரின் அமெரிக்க பயணம் இதற்கான எதிர்வினையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த நிலையில், விடுதலைப் போராட்ட காலத்தில் தலைவர் பிரபாகரனின் கட்டுக்கோப்பான வழிநடத்தல் அந்நிய அத்துமீறலை முற்றாகத் தடுத்து நிறுத்தியிருந்ததும், விடுதலைப் போராட்ட காலத்தில் எந்தவொரு நாட்டினாலும் சிங்கள இறைமையைக் கூட சிதைக்க முடியவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது.

இதனை தெளிவாக உணர்ந்திருந்ததால் தான் அப்போதைய பிரதமர் பிரேமதாச தமிழர்களுடன் இணைந்து இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்திருந்தார்.

இன்று, தமிழர்களை ஒடுக்கிவிட்டதாக மார்தட்டும் சிங்கள ஆளும் வர்க்கம் தமது இறைமையை அடகு வைத்து, ராஜபக்சக்களின் சட்டைப்பையை நிரப்பிக் கொண்டிருக்கிறது. விழித்துக் கொள்வார்களா சிங்களவர்கள்?

**தமிழர்களை ஒடுக்கிவிட்டதாக மார்தட்டும் சிங்கள ஆளும் வர்க்கம் தமது இறைமையை அடகு வைத்து, ராஜபக்சக்களின் சட்டைப்பையை நிரப்பிக் கொண்டிருக்கிறது. விழித்துக் கொள்வார்களா சிங்களவர்கள்?**

# சீன உதவியினால் நிர்மாணிக்கப்பட்ட டியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் ஒரு பகுதி

சீன உதவியினால் டியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பணியகம் மற்றும் நிகழ்வரங்கு ஆகியவை நிர்மாணிக்கப்பட்டு 2018 இல் உத்தியோகபூர்வமாக சிறிலங்கா இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது. சிறிலங்காவுக்கான சீனத்தூதுவர் மற்றும் சிறிலங்கா சீன இராணுவ அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். சீன இராணுவத்தின் உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு இந்நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.





# உலக அகதிகள் நாள்

**- வானிலா -**

ஆண்டுதோறும் ஜூன் 20 ஆம் திகதி உலக ஏதிலிகள் நாள் நினைவுகூரப்பட்டு வருகின்றது. சொந்த நாட்டை விட்டு, இருக்கும் சிறிய சேமிப்பையும் இருப்பிடத்தையும் உறவுகளையும் சந்தோஷத்தையும் தொலைத்து விட்டு, ஒருவர் வேறுநாட்டிற்குப் பயணிக்கின்றார் என்றால் அவர்களின் கையறு நிலையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பிழைத்தால் போதும் என்பதைத் தாண்டி அந்தப் பயணத்தில் வேறு எந்தவொரு இலட்சியமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.

உலக ஏதிலிகள் தினமானது முதலில் ஆபிரிக்க அகதிகள் நாளாகவே அனுஷ்டிக்கப்பட்டது. பின் மார்கழி 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின் படி புகலிடம் கோருவோர்க்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதன்முறையாக ஜூன் 20, 2001 ஆம் ஆண்டு உலக அகதிகள் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. உலக புகலிடம் கோருவோர் என்போர் பல்வேறு சூழலில், மோதல்களில் சிக்கி அகதிகளாக, தாம் வாழும் நாட்டிலும் பிற நாடுகளிலும் புலம்பெயர்ந்து, பல இன்னல்களை அனுபவிக்கும் ஏதிலிகள். இவர்கள் பற்றிய விழிப்புணர்வை உலக மக்களிடையே ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய நோக்கமாகும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் ( UNHCR ) ஒவ்வொரு ஆண்டும் இந்த தினத்திற்கான கருப்பொருளைத் தீர்மானிக்கின்றது. அது போல் இந்த ஆண்டும் கருப்பொருள் ஒன்றை வெளியிட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாக நாம் சேர்ந்து தேர்ந்து வெற்றி காண்போம்

(Together we heal / learn and shine) என்பதை UNHCR வெளியிட்டுள்ளது.

தாய் நாட்டை விட்டு வெளியேறி பிற நாடுகளில் தஞ்சமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. போர்ச்சூழல் காரணமாகவும், பாதுகாப்பின்மை காரணமாகவும் உலகம் முழுவதும் சுமார் 79.5 மில்லியன் கணக்கிலான மக்கள் ஏதிலிகளாக இருப்பதாகவும் அதில் 26 மில்லியன் பெண்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர் என்பதும் 2020 ஆம் ஆண்டின் கணிப்பு. மேலும் கண்சிமிட்டும் அதாவது ஐந்து நொடிக்கு ஒரு முறை ஒரு அகதி தங்கள் நாட்டில் வசிக்க முடியாமல் வேறு நாட்டில் தஞ்சம் அடைகின்றார் என்கிறது ஐக்கிய நாடுகள் சபை.

பொதுவாக புகலிடம் கோருவோர் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையால் ஆன அகதிகள், வங்கதேசப் போர், ஆப்கானிஸ்தான் போரினால் உருவாகிய ஏதிலிகள், திபெத் அகதிகள், பர்மா அகதி



**உறவுகளை இழந்தவன் அனாதை.....**

**பிறந்து வளர்ந்த மண்ணை இழந்தவன் அகதி......**

கள், இலங்கை தமிழர்கள் ஆகியோர் ஏதிலிகள் பட்டியலில் உள்ள மக்கள் ஆவார்கள்.

இந்தப்பட்டியலில் உலகம் முழுவதும் 54 நாடுகளில் இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்கின்றனர். உலகின் அதிக நாடுகளில் ஏதிலிகளாக வாழும் ஒரே இனம் இலங்கைத் தமிழர்கள் என்று யுனிசெப் ( UNICEF ) கூறியுள்ளது. இந்த ஆண்டிற்கான அதாவது 2021 ஆம் ஆண்டின் கருப்பொருள் Together we heal என்பது அனைவரும் ஒன்றாக சேர்ந்து வலிகளை குணப்படுத்துவதாகும். புகலிடமற்றோராக பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் முதல் நிலையாக மருத்துவ உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும். மற்றும் இரண்டாம் நிலையாக சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மனநல சுகாதார சேவைகள் என்பன அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதை UNHCR வலியுறுத்துகின்றது.

Together we learn என்பது ஒன்றிணைந்த கல்வி. பல்வேறு காரணங்களால் தாய் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே உள்ளது. அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதே இந்த ஆண்டின் உறுதிப்பாடாக உள்ளது. குழந்தைகள் தரமான கல்வியை பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் சிறந்து விளங்கும் என்பது உறுதியான ஒரு விடயமாக உள்ளது. Together we shine என்பது ஒன்றாக நாம் பிரகாசிப்போம், ஒளிருவோம் என்பதாகும். நாட்டை விட்டு வெளியேறியோர் கல்வியால் மட்டுமல்லாமல் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்க வேண்டும். விளையாட்டு என்பது மன ஆரோக்கியத்தை அதிகரிக்கின்றது, மற்றும் நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் தருகின்றது.



இதன் மூலம் இந்த ஆண்டின் நோக்கமாக புகலிடமற்றோர் அனைவரும் சுகாதாரம், கல்வி மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்கி அவர்களின் எதிர்காலத்தை அவர்களே கட்டமைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். தான் பிறந்து வளர்ந்த இடத்தை விட்டு வெளியேறுவது மிகப்பெரிய துயர். அதுவும் போரால் தம் உறவுகளை பிரிந்து, கிடைக்கும் இடத்தில் ஒட்டிக் கொள்ள வேண்டிய சூழல் கொடுமையானது. கோடிக்கணக்கானோர் இந்த கொடுமையை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் வலிகளை மற்றவர்களும் உணர்ந்து, இணைந்து செயல்பட வேண்டும்.

பிறந்த மண்ணை
எல்லை கடந்தாயிற்று.....
பெயரறியா மண்ணில்
வாழ்க்கை தொடர்ந்தாயிற்று.....
கசக்கி எறிந்த காகிதம் போல
கவலை தோய்ந்த முகங்கள் காட்டாமல்...........
சாதனைகளால் வேதனைகளை
கடந்து செல்வோம்......



# யாழ் நூலக எரிப்பின் 40 வது வருட நினைவாக




## யாழ் நூலக வரலாறு:


யாழ் புத்தூரைச் சேர்ந்த கே.எம்.செல்லப்பா (கனகசபை முதலித்தம்பி செல்லப்பா) என்பவர் 1933 நவம்பர் 11 இல் தனது வீட்டில் சில நூறு நூல்களுடன் நடத்தி வந்த நூலகமே இது. பலரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் செல்லப்பாவும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து யாழ் நகரின் மத்தியில், ஆஸ்பத்திரி வீதியில் அறையொன்றை வாடகைக்கு பெற்று இந்நூல் நிலையத்தை நடத்தினார்கள்.





**இந் நூலக அழிப்பு வன்கும்பலில் சிறிலங்காவின் அமைச்சர்கள் காமினி திசாநாயக்கா சிறில் மத்தியூ உட்பட பல சிங்கள தலைவர்கள் அடங்கியிருந்தனர். இவர்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் இருந்த அமைச்சர்கள்**

1936 இற்குப் பின் யாழ் நகரசபையிடம் இந்நூலகம் கையளிக்கப்பட்டு, யாழ் கோட்டைக்கு அருகே, புதிதாக கட்டப்பட்ட நகரசபை மண்டபத்திற்கு அருகேயுள்ள வீடொன்றுக்கு இடமாற்றப்பட்டது. யாழ் நகரசபை, யாழ் மாநகர சபையாக மாறிய பின், புதிய நூலகம் கட்டுவதற்கான நிதி திரட்டல் பெரும் ஆதரவையும், வெற்றியையும் பெற்றுத் தந்தது. நூலகத்துக்கான குழுவின் ஆதரவுடன் இந்திய கட்டிடக்கலை நிபுணர் திரு. நரசிம்மனால் திராவிட கட்டிட கலைப்பாணியில் இரண்டு தளங்களைக் கொண்ட கட்டிடம் அமைக்கப்பட்டது.







Cyril Mathew and Gamini Dissanayake

இதற்கான ஆரம்பப் பணி 1953 மார்ச் இல் தொடங்கி 1959 இல் முடிவு பெற்றது. இதனை அப்போது யாழ் மேயராக இருந்த திரு அல்பிறட் துரையப்பா திறந்து வைத்தார்.

இந்நூலகம் தென்கிழக்காசியாவில் மிகப் பெரிய நூலகமாக திகழ்ந்தது. யாழ் பொது நூலகத்தில் கிட்டத்தட்ட தொன்னூற்று ஏழாயிரம் (97000) அரிய நூல்கள் காணப்பட்டன.

யாழ் நூலக எரிப்பு நாளான 1981 மே 31 அன்று, யாழ்நகரில், சிங்கள காடையராலும், பொலிஸ் இராணுவ ஒத்துழைப்புடனும் ஆரம்பமான வன் முறையின் போது யாழ் நகரிலுள்ள முக்கிய சந்தை, வணிக நிலையங்கள், ஈழநாடு பத்திரி


சதம் 60

யாழ்.நூலகத்தை எரித்த பொலிசாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தனர்

மாநகரசபை காவலாளி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

'யாழ்.பொதுநூலகத்தை எரித்த பொலிஸாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தார்கள். அவர்களில் சிலரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.'

யாழ். மாநகரசபை காவலாளி திரு.பி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். இவர் உயர் மட்ட பொலிஸ் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்தார்.

பி. விக்னேஸ்வரன் இச்சம்பவம்பற்றி மேலும் கூறியதாவது:

'1-ம் தேதி இரவு 9-15 மணியளவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் எனக்கு போன் செய்தார். பெரியகடை மார்க்கட் கடைகள் எரிவதாகவும், 2 தண்ணீர் பௌசரைத் தயாராக வைத்திருக்கும்படியும்,

[6-ம் பக்கம் பார்க்க]

கைக் காரியாலயம், தமிழ் மக்களின் சுவாசமாக திகழ்ந்த யாழ் பொதுநூலகம் என்பன எரியூட்டப்பட்டன. யாழ் பொது நூலக வளாகத்தில் நுழைந்த வன்முறைக்கும்பல் காவலாளியை துரத்தி விட்டு நூலகத்தை சேதப்படுத்தி, கட்டிடத்திற்கு தீவைத்தனர். அந்த நேரத்தில், பொது நூலகத்திலிருந்து சுமார் எழு நூறு (700) யார் தொலைவிலேயே யாழ் பொலிஸ் நிலையமிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நூலக அழிப்பு வன்கும்பலில் காமினி திசாநாயக்க, சிறில் மத்தியூ உட்பட அப்போதைய சிங்கள தலைவர்கள் பலரும் அடங்கியிருந்தனர். 20ம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புக்களில் மிகப்பெரும் வன்முறையாக இது கருதப்படுகிறது. இச்செயலானது ஈழத் தமிழ் மக்களின் மனதில் அழியாத காயத்தை ஏற்படுத்தியது. இந்நூலக எரிப்பின் போது திரு ஐசாக் தம்பையா அளித்த ஆறாயிரம் (6000) நூல்கள் அழிந்து போயின. பிலிப்ஸ் பாலடியாரின் 'டச்சு ஆட்சியில் இலங்கை', 1660 இல் கண்டி மன்னனால் சிறை வைக்கப்பட்ட ராபர்ட் றோக்ஸ் எழுதிய இலங்கை பற்றிய நூல்கள் என்பனவும் எரிந்து சாம்பலாகிய நூல்களில் அடங்கும். இந்நூலகம் எரியும் செய்தி கேட்ட திரு தாவீது அடிகளார் அதிர்ச்சியில் மாரடைப்பால் காலமானார். இவ் வேளையில் அவரையும் நினைவு கூர்வோம்.

**பவானி**

---

# நலமுறு வாழ்வு

காலச் சூழலினும்
கயமை வாழ்விலினும்
ஈடுபாடில்லாமல் எச்செயலும்
செய்துழன்று
ஈடில்லாத் துன்பமாய்
பீடுற்று வாழாமல்
பாடுபட்டுச் செய்வதிலும்
பக்குவமாய் திட்டமிட்டு
ஈடுபட்டுச் செய்வோர்
புலமைச் செவ்வியர்
சால்புடைப் பெரியோர்
ஞாலத்தின் மீதினில்
வாழத் தகுந்தோர்!

அற்றைப் பெருநிலை
அறவே மறந்து
பொய்யாம் வினைகளை
மெய்யாம் என்று
செய்யாப் பணியை
சீர்சிறப்பென்று
நல்லுரை சொல்வோர்
நாயிலும் கீழோர்
பொய்யுரை புகல்வோர்
தூற்றுதற்குரியோர்
தீமைகள் புரிவோர்
தீண்டத் தகாதோர்
மேதினி மீதினில்
வாழத் தகாதோர்!

நல்லவராய் நயத்திருந்தால்
நன்னலத்துடன் நன்றேயிருப்பர்
அல்லவராய் அயர்ந்திருந்தால்
அவலத்துடன் அவதியுற்றிருப்பர்
வல்லவராய் வாய்மையுடன்
வாழ்ந்து உளங் கனிவித்து
மெய்மை கொளுத்தி மேலுக்குய்த்து
நன்மையும் தீமையும்
நாடியுணர்ந்து தேடியுணர்ந்து
மயர்வறு உயர்வறு துயரறு அயர்வறும்
நலமுறு வாழ்வை
நன்மையிலேயே வாழ்ந்திருத்தல் நன்றே!

-ஜெ.கலைவாணி-

# சிவகுமாரனும் தமிழ் மாணவர் பேரவையும்



சாத்வீகமான முறையில் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்த ஈழத் தமிழர் வரலாறு, பின்னர் புதிய பரிணாமம் கொண்டு வீரியமிக்க ஆயுதப் போராட்டமாக உருமாறியது. இதற்கு முக்கிய காரணியாக இருந்தவர் தியாகி பொன் சிவகுமாரன்.

உரும்பிராயில் 26.08.1950 இல் பிறந்த சிவகுமாரன் யாழ் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்றவர். காலத்திற்குக் காலம் தமிழர்களுக்கெதிராக சிங்கள அரசால் கட்டவிழ்த்து விடப்படும் கல வரங்களும், அதற்கெதிராக போராட்டங்களை நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளின் மென்போக்கும் இளைஞர்களின் மனதில் போராட்ட உணர்வை வலுவாக்கியிருந்த காலம் அது.

சிறிமாவோவின் அமைச்சரவையில் இருந்த சோமவீர சந்திரசிறி உரும்பராய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் விழாவொன்றிற்கு வந்தபோது, அவரின் தமிழ்த் துவேச பேச்சினால் கோபம் கொண்டிருந்த சிவகுமாரன் அவரது வாகனத்திற்கு குண்டு வைத்தார் என்று கைது செய்யப்பட்டார். இதுதான் எங்கள் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் புள்ளி. 1970 இல் 'தரப்படுத்தல்' இனால் தமிழ் மாணவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகியது. அந்த நேரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை ஒன்று திரட்டி, 'தமிழ் மாணவர் பேரவை' யினை உருவாக்கி, போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றார் சத்தியசீலன். தமிழ் மாணவர் பேரவையுடன் தன்னை இணைத்துக் கொண்ட சிவகுமாரன் தமிழ் மாணவர் பேரவையுடன் இணைந்தும் தனியாகவும் பல போராட்டங்களில் பங்கேற்றார்.

1971 இல் யாழ் நகர மேயராகவும் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டிருந்தவருமான அல்பிரட் துரையப்பா மீதான குண்டுத் தாக்குதலை நடத்தினார். வாகனம் மட்டுமே சேதமடைந்து, துரையப்பா தப்பிவிட தோல்வியில் முடிவடைந்தது அத்தாக்குதல். (1975 இல் துரையப்பாவிற்கு முடிவுகட்டி, சிவகுமாரன் ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தை 35 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து நடத்தி தமிழர்களின் பாதுகாவலனாக உயர்ந்து நிற்பவர் மேதகு தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். ) துரையப்பா கொலை முயற்சிக்காக இரண்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார் சிவகுமாரன். வெளியில் வந்ததுமே அடுத்த முயற்சியில் இறங்கினார். இளைஞர் பேரவை நடாத்தும் உண்ணாவிரதங்களில் பங்குபற்றி மதியுரை வழங்கினார்.

யாழில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் 9 நாட்களும் ஒரு தொண்டனாக அயராது உழைத்தவர் சிவகுமாரன். மாநாட்டின் குழப்பத்திற்கும் படுகொலைகளுக்கும் காரணமாகவிருந்த சந்திரசேகரவைக் கொல்ல முயன்றார். அது தோல்வியடைந்தது. அதற்காகத் தேடப்பட்டு தலைமறைவானார். பின்னர் விடுதலைக்காகப் போராடுபவர்களைக் காட்டிக் கொடுக்கும் உரும்பிராய் நடராசாவைக் கொல்ல முயன்றபோது சுற்றிவளைக்கப்பட்டார். உயிருடன் பிடிபடக்கூடாது என்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார். இந்த ஈக வரலாற்றைத் தொடக்கி வைத்தவரும் தியாகி சிவகுமாரன்தான்.

வரலாற்றில் அழிக்க முடியாத சக்தி மாணவர் சக்தி. அதனால்தான் சிங்கள அரசு தமிழ் மாணவர்களை ஒடுக்குவதில் முனைப்போடு பல்வேறு திட்டங்களைப் போட்டு செயற்படுகின்றது. மாணவனாக சமுதாயத்தில் இருந்து எழுந்து, மக்களுக்காகப் போராடிய, ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாகிய சிவகுமாரன் என்றும் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர். அவரின் வீரச்சாவு நாளான ஜூன் 5 அன்று சுற்றுச் சூழல் நாளாக கொண்டாடப்படுவதால் ஜூன் 6 மாணவர் எழுச்சி நாளாக நினைவுகூரப்படுகின்றது.

**- ரத்தி**




# மெய்நிகர் நூலகம் (இணையவழி)

## (யாழ் போதுநூலகத்தின் 40ஆம் ஆண்டு நினைவின் வலியோடு)

உலகப்பரப்பில், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை இளையோர்கள், இலங்கைதீவின் வடக்கு-கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்களின் மரபின் தொடர்ச்சியாகவும், தமிழீழ மக்களின் நல்லாசியுடனும், தமிழ்நாட்டுத் தமிழர்களின் வாழ்த்துக்களோடும், வருகிற மே 30ஆம் நாள் (2021) அன்று, யாழ் பொதுநூலக எரிப்பின் 40ஆம் ஆண்டு நினைவின் வலிகளை எடுத்தியம்பும் விதமாக, இணையவழியில் மெய்நிகர் நூலகத் திறப்புவிழா மேற்கொள்கிறோம்.

யாழ் நூலகம், தமிழர் தேசத்தின் அறிவுக்களஞ்சியமாகவும் தமிழர் சிந்தனையை வளர்த்தெடுத்த பேரியக்கமாகவும் விளங்கியது.

1981ஆம் ஆண்டு, மே 31 ஆம் நாள் இரவில், தமிழர்களின் வரலாறுகளையும் தொன்மங்களையும் சுமந்திருந்த ஓலைச்சுவடிகளோடும் 96000ற்கும் மேற்பட்ட நூல்களையும் கொண்டு, தென்ஆசியாவின் பெரிய ‘வரலாற்று நூலகம்’ என உலகப் புகழ்ப்பெற்றிருந்த யாழ் நூலகத்தினை, சிங்கள காடையர்கள் சிங்கள அரசியல்வாதிகளின்

தூண்டுதலால் எரித்து சாம்பலாக்கினர். கிடைப்பதற்கரிய வரலாற்று நூல்களும் ஆவணங்களும் இனி தமிழர் கைகளுக்கு எப்பொழுதும் கிடைக்கவே கூடாது என்ற சிங்களப் பேரினவாதத்தின் நோக்கம் நிறைவேறியது எனலாம். தமிழர்களின் தேசத்தினையும் இறையாண்மையையும் அழித்த அதே சிங்கள சிந்தனைவாதம், தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களையும் தொன்மைகளையும் அழித்து பண்பாட்டு இனவழிப்பின் முக்கிய நிகழ்வையும் பதிவு செய்தது. கொடூரமான மனித குல பேரழிப்பினை சிங்கள பேரினவாதம் நிகழ்த்தியபொழுது வேடிக்கை பார்த்த சர்வதேச சமூகம் யாழ் நூலக எரிப்பின் பண்பாட்டு இனவழிப்பின் பொழுதும், 40ஆண்டுகள் கடந்த பின்பும், அதே அமைதியோடு வேடிக்கை பார்க்கிறது.

இனவழிப்புப் போரின் தொடர்ச்சியாக, இலங்கைத் தீவினுள் இருக்கும் தமிழர் தேச, தமிழர் வரலாற்று அடையாளங்களையும், இணையவழியில் ஆங்காங்கே இருக்கும் தகவல்கள், ஆவணங்கள் மற்றும் காணொலிகளையும் திட்டமிட்ட வகையில், சிங்களப் பேரினவாதமும் அதன் கூட்டாளி நாடுகளும் தொடர்ந்தும் அழித்து வருகிறன.

இத்தகைய பின்னணியில் இருந்து, யாழ் நூலக எரிப்பின் 40ஆம் ஆண்டு நினைவின் நிகழ்வாகவும், தமிழர்கள் புலம்பெயர்நத நாடுகளில் பிறந்து, வளரும் இரண்டு தலைமுறை இளையோர்களின் பெரும் முயற்சியில், தமிழர்களின் வரலாறு, தேசிய, இறையாண்மை அடையாளங்கள் கொண்ட அரசியல் ஆவணங்கள், நூல்கள், தமிழர் பண்பாடு, தொல்லியல் ஆவணங்கள் என பலவற்றையும் வரிசைப்படுத்தி, இணையவழியில் நூலகமாக உருவாக்கியுள்ளனர்.

நூலகத் திறப்பின் பின்னரும், தொடர்ந்து அதனை மேம்படுத்த வேண்டியுள்ள பல பணிகள் காத்திருப்பதால், எம் மெய்நிகர் நூலகத்தினை தரம் உயர்த்தவும், வழிகாட்டவும், எமது அடுத்தடுத்த தலைமுறைகள் தமிழர்களின் வரலாற்றினை படித்து அறிந்துக்கொள்ளும் நம்பகமான தளமாக மாற்றவும் இணையவழியில் எம்மோடு இணைந்து தன்னார்வலர்கள் முன்வர அழைப்புவிடுக்கிறோம்.

**Tamil Eelam Library Team**

Website: www.telibrary.con
Email: telibrary.com@gmail.com
Instagram: @te_library
Facebook: telibrary

# இலட்சியக் கனவு

கனவு
வாழ்க்கையே வெறும் கனவு.
கற்பனைகளை சுமந்து
கனவுகள் பல பேசி
பள்ளிப் பருவமதில் – நாம்
கண்ட கனவுகள் ஏராளம்.
எல்லாக் கனவுகளும் நிஜமாவதில்லை.

தெரிந்தும்
அலைபாயும் மனதிற்கு
கனவுகள் ஆறுதலே!
இளமைகாலத்தின்
கனவை மறந்து
இதயம் துடித்தது
தாயகக் கனவில்.

ஓ!! எத்தனை உயர்கனவு!
தமிழீழ தனியரசு!
அதற்கான கனவில்
வலிகள் தெரியவில்லை!
துயரங்கள் தீண்டவில்லை!

இலக்கொன்றே இலட்சியமாய்,
வண்ணக் கனவுக்காய்,
தாயகமண்ணில்
ஏராளம்,
கனவினை சுமந்து
கனவுக்காய் மடிந்த
பல்லாயிரம் மாவீரர்
இலட்சியம்
நம்பிக்கை ஒளியாக!!

அவர்தம் நினைவுகளை
நடுகல்லாய் மனம்
சுமக்க,
ஏதிலியாக.
எங்கோ வலியுடன்
வாழ்க்கை தொடர்கதையாக
விழிகள் கண்ணீர் சொரிய
மனம் சொல்லியது
எங்கள் கனவு
ஒருநாள்
நனவாகுமென்று.

–அஸ்மீரா–
இலண்டன்




# நீசப் பார்வைக்குள் நிலாவரையுமா?

- அத்தி -

கூரிய நகங்களுடன் கூடிய இன அழிப்புக்கரங்கள் தமிழனு டைய இருப்பைக் கீறிக் கிழிப்பதற்காக எங்கெல்லாம் நீண்டு செல்லும் என்பதற்கோர் சமகால உதாரணமாக யாழ் நிலாவரைப் பிரதேசம் அவ்வப்பொழுது பதட்டமாகி அமைதி இழந்து கிடக்கிறது.

நிலாவரை இந்தப் பெயரை அறியாத எந்தத் தமிழனும் இல்லை. யாழ்-புத்தூரில் உள்ள நிலாவரைப் பிரதேசத்தில், வேம்பு, வாகை போன்ற விருட்சங்கள் நிழல் பரப்பிக் கொண்டிருக்க இயற்கையின் அதிசயமாய் அமைந்து இருக்கும் நிலாவ ரைக் கிணறு தனக்குள் புதைத்து வைத்திருக்கும் தொன்மைமிக்கதும், யாரும் இதுவரை அறிய முடியாததுமான வரலாற்று இரகசியம். உலக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொண்டிருக்கும் ஆழம் காண முடியாத ஒரு ஆச்சரியம்!

எத்தனை வரட்சியென்றாலும், ஓர் அங்குலம் கூட வற்றாமலும், எந்தக் கடும் மழை, தொடர்மழை என்றாலும் ஓர் அங்குலம் கூட அதிகரிக்காமலும் இருக்கின்ற இந்தக் கிணற்றின் நீர் மட்டம் ஒரு வரலாற்று அதிசயம். இன்னமும் யாராலுமே காரணம் அறிய முடியாமலிருக்கின்ற ஒரு இயற்கையின் புதிர்! புத்தூரின் அயற் கிராமங்களுக்கு எல்லாம் விவசாயம் செழிப்பதற்கு நீரை வாரி வழங்கிக் கொண் டிருக்கும் அமுதசுரபி.

தமிழனுடைய நிலத்தில் இந்த கிணறு பல வெளிநாட்டவர்களின் கவனத்தை கவர்ந்த போதும், அவ்வப்போது வந்த வெவ்வேறு நாட்டவர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட போதும் இந்த அதிசயம் பற்றிய சரியான முடிவு எதுவும் அறிய முடியவில்லை. தட்சிண கைலாய புராணம் என்ற நூலில் கூறப்பட்டுள்ள புராதனமான சிவன் கோவில் நிலாவறைக் கிணற்றுக்கு நேர் எதிரில் அமைந்து இருக்கிறது. இந்தக் கிணறு, சிவனுடைய தீர்த்தக் கேணியாக இருந்திருக்கலாம் என்றொரு ஊகமும் உண்டு.

இதன் மர்மத்தைத் துலக்க நினைத்து, ஐந்து வருடங்களுக்கு முன் 2016இல் சிறிலங்காவின் கடற்படையினர் உள்ளே இறங்கினார்கள். சுமார் நூற்றெண்பது (180) அடி ஆழத்தில் இதன் கீழ் மட்டம் தெரிவதாகவும் உள்ளே மூன்று மாட்டு வண்டிகள் கிடைப்பதை (Robot) படங்கள் காட்டியதாகவும், அவற்றில் ஒரு வண்டி சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும் அந்த ஆய்வுகள் கண்டறிந்த போதும் கிணற்றின் மர்மம் பற்றிய வேறெந்தக் கோடி காட்டலையும் அவர்களால் பெற முடியவில்லை.

பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் நிலாவரைக் கிணற்றின் ஆழமான பகுதிகளில் குகைகள் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இந்தக் குகைகளினூடாக நீரோட்டம் நடைபெறுவதாகவும் அறியப்படுகிறது. சில இடங்களில் வேகமாகவும் சில இடங்களில் மெதுவாகவும் செல்கின்ற இந்த நீரோட்டத்தில் சில கீரிமலைக் கேணியுடன் தொடர்புபடுவதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, பல அதிசய மர்மங்களின் பிறப்பிட மான நிலாவரைக் கிணறு, 2009 போர் மௌனிப்புக்கு பிறகு, சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சி மையமாகவும் மாறியதில் வியப்பில்லை. யாழ் வலி-காமம் கிழக்கு பிரதேசசபையின் பொறுப்பிலுள்ள இந்த தமிழனுடைய மரபு வழிச்சொத்து அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில் இனவாதப் பார்வை-க்குள் சிக்குண்டு, நிலாவரைப் பிரதேசத்தையே இன்று ஒரு போர்க்களமாக மாற்றி இருக்கிறது.

சில வருடங்களுக்கு முன் இந்தப்பகுதிக்கு முன்பாக உள்ள முருகன் கோவிலை புனரமைப்பதாகக் கூறிய இனவாதிகள், கோவிலின் கூரையை ஒரு புத்த விகாரைக்குரிய கூரை போல மாற்றிய-மைத்ததும், உள்ளே இருக்கும் கல்வெட்டில் கோவிலை திறந்து வைத்தவர் பெயராக ஒரு சிங்கள இராணுவத் தளபதியின் பெயர் பொறிக்கப் பட்டிருப்பதும், மிக அருகில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டதும், தமிழனுக்குச் சொந்தமான இந்தப் பகுதியை பௌத்த சிங்கள மயமாக்கும் தந்திரோபாயத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

2021 ஜனவரி 21 கொறனா தொற்றின் அச்சத்தால் ஊர் முழுவதும் உள்ளேயே முடங்கிக் கிடக்கிறது. திடுதிடுப்பென தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் சிலர் நிலாவரைப் பகுதிக்கு வருகை தருகிறார்கள். ஏதோ ஆய்வுகள் செய்யப் போவதாக சொல்லி, அங்கே கிடங்குகள் வெட்டத் தொடங்கினார்கள். நோய்த் தொற்றின் அபாயத்தைக் கூட கருதாமல் அந்த நேரத்தில் இவர்களுக்கென்ன அகழ்வாராய்ச்சி? அதன் உள் நோக்கம் தான் என்ன? முதலில் துப்பரவுப் பணி என்றார்கள். அதன் பிறகு அகழ்வாராய்ச்சி என்றார்கள். முன்னுக்குப் பின் முரணான இந்தக்கூற்றுக்கள், வன்னியிலும், கிழக்கிலங்கையிலும் சிங்கள பௌத்தமயமாக்கல் இலக்குடன் தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி-களை நினைவூட்டுவதை தவிர்க்க முடியவில்லை.

பிரதேசப் பொறுப்பாளரிடம் அனுமதி பெற்ற பின்-னர் தான் அவர்கள் எதையும் செய்ய முடியும்





என்று சொன்னபோது, தாங்கள் அனுமதி பெற்றே வந்தோம் என்ற அவர்களுடைய கூற்றைப் பொய் என்று நிரூபிக்கும் வகையில் பிரதேசப் பொறுப்பாளர் திரு நிரோஜ் தியாகராசா அவர்களும், திரு சிவாஜிலிங்கம் அவர்களும் அந்த இடத்துக்கு வந்த போது, தங்கள் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் காட்டும் விதத்தில் மக்களும் திரண்டு வந்து, ஏகோபித்த எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். வேறு வழியின்றி திரும்பிச் சென்றது தொல்பொருள் திணைக்களம்.

மீண்டும் 2021 மார்ச் 20ம் திகதி கஜபா ரெஜிமெ-ன்ட் இராணுவத்தினரையும் உடன் அழைத்துக் கொண்டு அதே இலக்குடன் அவர்கள் நிலாவரைக்கு வந்தார்கள். யாரும் எந்தக் கேள்வியும் கேட்காமல் இருக்கவும், உளவியல் ரீதியான அச்சுறுத்-தலை ஏற்படுத்தவுமே இந்த இராணுவ பிரசன்னம்.

தமிழனுடைய இன வரலாற்றுச் சின்னங்களை அழித்தொழித்து, சிங்கள பௌத்தமயமாக்கல் தந்திரோபாயத்தை அரங்கேற்ற வந்தவர்கள் சற்றும் எதிர்பாராமல் அன்றும் மக்களின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. கலைந்து பின் வாங்கிச் சென்றார்கள். தமிழனுடைய குரல்வளையை நசுக்கும் இனவாதக்கரங்கள் மறுபடியும் அங்கே எப்பொழுது, எப்படி நீண்டு வரப்போகின்றன என்பதைக் காலம் தான் சொல்ல வேண்டும்.

# சிறகுகள் ஒடிந்தாலும் சிகரம் தொடுவோம்

மிதயா கானவி

முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் இருந்து உயிர் தப்பிப்பிழைத்து ஆனந்தகுமாரசாமி இடைத்தங்கல் முகாமிற்கு வந்து விட்டோம் என்ற விதுர்சிகாவின் பெற்றோர்களின் நம்பிக்கையை தவிடுபொடியாக்கியது அந்த வெடிச்சத்தம்! இராணுவத்தினரின் துப்பாக்கியில் இருந்து பாய்ந்து வந்த குண்டு விதுர்ஷிகாவின் உடலை துளைத்துக் கொண்டு போனதால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு இடுப்பிற்கு கீழ் இயக்கம் இழந்தது.

'மக்களை கட்டுப்படுத்துவதற்காக சுட்டோம்' என்றனர் படையினர்.

பல நாட்கள் மாதங்களாகியும் மருத்துவமனையை விட்டு வர முடியவில்லை!! இதனால் சுற்றித்திரியும் பள்ளிப்பருவமும், அவளது தரம் ஒன்றிற்காய் பாடசாலை செல்லவிருந்த முதல் நாள் கனவும் சின்னா பின்னமாகியது! உடல் வலுவற்று கால்கள் பாரமாகியது! குதூகலிக்க வேண்டிய குழந்தைப் பருவம் இப்படியாகிவிடுமென்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. கால்களில் உணர்ச்சி இல்லை என்பதை நம்பமுடியாத நிமிடங்கள் தந்த வலிகள் சொல்லி முடியாது.

எப்படியும் ஒருதடவை நிலத்தில் இறங்கி நிற்க வேண்டும் என்றெண்ணி அடிக்கடி தோற்றுப் போன நாட்களை இன்று ஒரு புன்னகையுடன் கடந்து செல்ல இவளாலும் முடியும் என்பதை இவளின் அசைக்க முடியாத தன்னம்பிக்கை காட்டுகின்றது. எல்லோரும் ஊருக்கு திரும்பியபோது இவர்களும் முள்ளியவளை முதலாம் வட்டாரத்திற்குள் புகுந்தனர்.

சொந்த நிலம் சுடுகாடாய் கிடந்தது!. பாட்டன் வைத்த பலாமரமும் பாதி உயிராய் கிடக்க, தென்னோலையும் தேங்காயும் விற்றே வாழ்ந்திடலாம் என எண்ணி வைத்த தென்னைகள் எல்லாம் தலையற்று கிடந்தன.

எறும்பு, அரிசிக் குறுநல்களை சேர்ப்பது போல் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த அத்தனை உடமைகளையும் போர் பறித்து சென்றுவிட்டது. முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட தன் குழந்தையின் வலிகள் மறு பக்கம் குடும்ப வருமானங்களை இழந்தவராய், இனிவரும் நாட்களில் வாழ்க்கைச் செலவை எப்படிச் சமாளிப்பது என்ற ஏக்கத்துடன் புகுந்த தந்தைக்கு, வீடே இல்லாத நிலையில், பாதிக்கப்பட்ட நிலையில் எப்படி மகவை பராமரிக்கப் போகிறீர்கள் என வினவியவர்களுக்கு தனது நம்பிக்கையை மட்டுமே அவரால் பதிலாகத் தரமுடிந்தது. ஆனால், அப்போது அவர்கள் அனுபவித்த துயரங்கள் அனைத்தையும் மறந்து போக வைத்திருக்கிறது மகள் விதுர்சிகாவின் பரீட்சை முடிவுகள்.



கொழும்பு அநுராதபுரம் என்று மாறி மாறி மருத்துவ மனைகளிற்குச் சுமந்து சென்றனர், குழந்தையை எப்படியாவது சுகப்படுத்தி விடவேண்டும் என்று! ஆனாலும், அது நிரந்தரமான பாதிப்பு என்பதை தெரிந்த பெற்றோர் பட்ட வலி சொல்லமுடி யாத சோகம்! ஆனாலும் சோர்ந்து போகவில்லை. தன்னம்பிக்கையை கொடுப்பதற்கு தாய் தந்தை பின் நிற்கவில்லை.

இரண்டாம் வகுப்பின் இரண்டாம் தவணையில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் பாடசாலை கல்வியைத் தொடங்கினாள்.

இடப்பெயர்வுகளை சந்தித்த பாடசாலை அவ் வளவு வசதிகளுடன் இருக்காவிட்டாலும், ஆசி ரியர்கள் அர்ப்பணிப்புடன் தன்னுடைய கல்விக்கு ஊக்கமளித்தனர் என்பதை நன்றியுடன் கூறிக் கொள்கின்றாள்.

உடற்குறையை வென்று தன்னை மெருகேற்றிக் கொள்வது தான் இவளது ஒற்றை இலக்காகி யது. வறுமை, உடல் நலக்குறைவு அவ்வப்போது அவளது மனதை கீறிக்கொண்டிருந்தாலும், அந் தக் கீறல்களிற்கு கல்வியால் மருந்திடலாம் என்று உறுதியாக எண்ணிக்கொள்கின்றாள்.

பெற்ற மகளுக்காக தன்னையே உருக்கி உடல் இயலாமையை புறந்தள்ளி தன் நேரங்களை செலவுசெய்து வருகின்ற தாய் உதயகுமாரிக்கும்.. கூலி வேலை செல்லும் தந்தையின் வலிகளை துடைத்தெறிய தன் இலட்சியங்களை விரிவுபடு-த்தினாள் விதுர்சிகா!

சாதுவான பெண்ணாக இருந்தாலும் தன்னம்பி க்கையில் சிகரம் தொடும் குரல்! பாடசாலையில் மாணவர்கள் விளையாடும் போதெல்லாம் தன் நிலையை எண்ணி வருந்துவதை தவிர்த்து, மாற்று வழி தேடத்தொடங்கினாள் புத்தங்களை வாசிக்கப் பழக்கப்படுத்தினாள். சாதனைப்பெண்களின் சரி-த்திரங்களை அதிகம் விரும்பிப்படிப்பது அவளது பொழுது போக்காகியது.

கிடைக்கவில்லை என்பதை எண்ணி வருந்து-வதை விடுத்து கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தன-க்கு சாதகமானவற்றை தேர்வு செய்வதுதான் அவளது வெற்றிகளிற்கு படிக்கல்லாகியது.!

ஒளியை நோக்கி முகத்தை திருப்பினாள் நிழல் பின்னுக்குத்தான் செல்ல வேண்டும் என்பது இவள் வாழ்விலும் உண்மையாகியது. விஞ்ஞானம்,



கணிதம் ஆகிய பாடங்களை விரும்பிப் படிப்பதா கக் கூறும் விதுர்ஷிகா 2019 ஆண்டு நடைபெற்ற கல்வி பொது சாதாரண தரப் தரப்பரீட்சையில் 6A, B, 2C பெறுபேற்றை பெற்றிருந்தார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற முடியாவிட்டாலும் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வலயத்தில் வெற்றி பெற்று மாகாணம் வரை சென்று வென்றிருக்கி-ன்றாள்.! பாடசாலை சமூகம் தன் முயற்சிகளிற்கு பக்கபலமாக இருந்ததாகவும், தங்கள் சிரமங்-களைப் பாராமல் வேறுபாடற்று சக்கரநாற்காலி யில் இருக்கும் தன்னையும் கவனித்துக் கொண்டா ர்கள் என்றும் கண்கள் பனிக்க நன்றிகளை கூறிக் கொள்கிறாள்.

பாடசாலையை விட்டு வெளியிடங்களில் நடை பெறும் போட்டி நிகழ்வுகளில் தான் கலந்து கொள் வதில்லை என்றும், அதற்கான போக்குவரத்து வசதி மற்றும் அவசிய தேவைகளை சமாளிக்க முடியாது என்ற வருத்தம் அவள் உதட்டோரம் ஒட்-

டியிருந்தாலும் அந்த வலிகளிற்குள் முடங்கி விடவில்லை. முள்ளியவளையின் மணல் வீதிகளில் சேறு சகதிகளில் புதைந்த சக்கரங்களை எடுக்க முடியாது! கடந்த நாட்களையும் மழைநீருடன் சேர்த்து கலந்து போன தாய் உதயகுமாரியின் கண்ணீரையும் இன்று துடைத்து விட்டிருக்கின்றாள் இந்த மகள்!

தொடர்ந்து சக்கரநாற்காலியில் இருப்பது என்பது சாதாரணவிடயமல்ல. காலை ஐந்து மணிக்கு எழும்பிப் படிப்பதற்கு உட்கார்ந்தால் இரவு பதினொரு மணிவரை படிப்பாள். கடின உழைப்பின் பின் தான் இன்று இந்த பெறுபேற்றைப் பெற்று இந்த சமூகத்திற்கு ஒரு முன்னோடியாக திகழ்கின்றாள். எத்தனை துன்பங்கள் வந்தாலும் எதிரில் தெரிவது இலக்கு மட்டுமாகவே இருந்தால் எவராலும் சாதிக்கமுடியும் என்பதில் ஐயம் இல்லை! மாணவர்கள் யாவரும் குறைந்தவர்கள் அல்லர். சரியான அர்ப்பணிப்புடன் ஆசிரியர்களும், மாணவர்களும் பயணித்தால் நிச்சயம் மாற்றம் ஏற்படும்.

இயலாது என்று ஒன்றுமில்லை என்பதை இன்று இப்படியான மாற்றுத்திறனாளி மாணவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள்.

சிறகுகள் ஒடிக்கப்பட்டவுடன் சிதைந்து போகாமல் தன் ஒற்றை இலக்கு மட்டுமே கண்ணில் தெரிய சக்கரநாற்காலியில் இருந்தவாறே சாதித்திருக்கின்றாள் இந்த சாதனைப் பெண்!

"நான் ஒரு வைத்தியராக வந்து என்னைப்போன்று பாதிக்கப்பட்டவர்களிற்கு சேவை செய்வதே என் இலட்சியம்" என்கின்றாள் செல்வி மதியழகன் விதுர்சிகா..!

முள்ளிவாய்க்கால் தந்த வலிகளில் வாடிப்போகாமல் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்திருக்கும் இந்த சாதனையாளர்களை நாம் வாழ்த்தாமல் இருக்கமுடியாது. சாதிக்க நினைப்பவர்களின் முதற்படி தன்னை முழுமையாக நம்புவதுதான்..! இவளும் அப்படித்தான். அனைத்து நாட்களையும் புதுப்புது நாட்களாகவே கடக்க முயற்சித்துக் கொண்டிக்கிறாள். கால்கள் நடக்க மறுத்தாலும், உடல் நரம்புகள் சுள்ளென வலித்தாலும் ஒவ்வொரு நாளிலும் ஏதோவொன்றை சந்தோசமாக நினைத்து கொள்கின்றாள்.



# நல்வாக்கு

வாக்கொன்று தந்துவிட்டால் அவனி தன்னில்
வந்த இடர் பாராமல் காக்க வேண்டும் !
தாக்கத்தைத் தரும் வகையில் பேச்சை மாற்றித்
தன் போக்கில் மாற்றிடாத் தன்மை வேண்டும்!
ஊக்கத்தைத் தரும் நல்ல உணர்வு வேண்டும்!
உண்மைக்கே மதிப்பளித்துப் பேச வேண்டும் !
ஆக்கத்தைக் கெடுக்கின்ற வாக்கின் ஆற்றல்
ஆங்காரம் அத்தனையும் அழிய வேண்டும்!

கலக்கத்தைப் போக்குகின்ற வாக்கும் உண்டு
கண்ணீரை வரவழைக்கும் வாக்கும் உண்டு !
உலகத்தார் மதிக்கின்ற வாக்கே வேண்டும் !
உணர்வொன்றிப் பேசுகின்ற தன்மை வேண்டும் !
பல கற்றும் பயனில்லை பகையைத் தேடும்
பரிதாப நிலையுற்றால் உள்ளம் வாடும் !
சலனத்தைத் தருகின்ற பேச்சால் – நெஞ்சைச்
சரிபாதி ஆக்காத வாக்கே வேண்டும் !

பொல்லாதார் பேசுகின்ற பேச்சைக் கேட்டுப்
போதுமிந்த வையகத்தில் பட்ட பாடு !
எல்லாமும் எமக்கிங்கோர் பாடம் என்றே
எண்ணி நிதம் பேச வேண்டும் இனிமை பொங்க !
கல்லார்க்கும் கற்றவர்க்கும் வேறு பாடு
கண்டிடலாம் அவர் பேச்சை வைத்து நாளும் !
வில்லேந்தும் வார்த்தைகளால் விளையும் துன்பம்
விறகாகிப் போனாலும் மனத்தைக் கொல்லும் !

மண்ணில் நாம் கொண்டவெழில் மறைந்து போகும்
மறையாத நினைவாகப் பேச்சே வாழும் !
எண்ணத்தைச் சரி செய்து பேச வேண்டும்
எதிரிக்கும் நம் பேச்சு இனிக்க வேண்டும் !
உண்ணத்தான் உணவின்றி வாடும் போதும்
உலகத்தின் நன்மைக்காய்ப் பேச வேண்டும்!
பண்போடு பேசுகின்ற வார்த்தை கேட்டுப்
பணியாத மனமும் தான் பணிய வேண்டும் !
பண்ணிலும் உரையிலும் பற்பல சொல்லிலும்
எண்ணறு மேடையில் விண்ணதிர்ந்தாட
கண்ணிமை திறந்திட
காதுகள் கூர்ந்திட
நெஞ்சிலும் நினைவிலும்
நெட்டுயிர்க்கின்ற மூச்சிலும்
நல்வாக்கு வேண்டும்!

–தமிழ்நிலா–



# முள்ளிக் கதறல்கள்



1

ஓலமிட் டழுதோம் ஓடினோம் ஒடுங்கினோம்
ஒவ்வோ ரணுவாய்ச் சிதைந்தோம்!
காலத் தலைவன் காத்தெமைப் புரந்த
கனித்தமி ழீழத்தில் புதைந்தோம்!
ஞாலத் தெவரும் நாடினா ரில்லை
நாங்கள்ஏன் செத்து மடிந்தோம்!
மூலத் தாயக முள்ளி வாய்க்காலில்
முடைநாற் றத்திலே கிடந்தோம்!

2

முள்ளி வாய்க்காலில் மூண்டவெம் போரில்
முடுக்கினார் பகைவர்யாம் உருண்டோம்!
கொள்ளிவைத் தழித்தார் குதறினார் கொன்றார்
குமுறிக் குமுறிவுடல் புரண்டோம்!
அள்ளி அணைத்திட யாருமில் லாமலே
அழுது அழுதுவுயிர் கரிந்தோம்!
வெள்ளி முளைக்கவோ விடுதலை பூக்கவோ
வியன்தமிழ் ஈழத்தில் எரிந்தோம்!

3

கட்டுமரம் ஏறி வந்து கரையொதுங்கி
நின்றவுன்னைக்
கைபிடித்து வைத்தற்கோ பாவி
சுட்டகுண்டு பேய்நெருப்புச் சூறையிலே
சுற்றமெல்லாம்
சொந்தமின்றி விட்டதடா ஆவி!
நட்டநடுக் காட்டினிலே நாய்நரிகள் ஊளையிலே
நாற்புறமும் கிடக்குதடா சொந்தம்!
கெட்டழிந்து விட்டோமே கிள்ளியெறி யாமையினால்
கீழ்மையனே சிங்களவ புத்தா!

4


கண்கள் சூன்றார் கைகள் பிணைத்தார்
கழுத்துக்கள் நெரித்தார் சிரித்தார்!
பண்கள் மிழற்றும் பைந்தமிழ் ஈழத்தில்
பாவிகள் ஏன்எமைப் பிரித்தார்!
பெண்கள் தொட்டார் பிள்ளைகள் சுட்டார்
பெரும்பழி செய்து நட்டார்!
மண்ணில் அறம்புகல் மாந்தரெல் லாரும்
மறந்தெமை ஏன் கை விட்டார்!

5

இந்தியர் சிங்களர் இணைந்து கொன்றெமை
எரித்துக் கரித்துப் பொரித்தாரே!
மந்திகள் கைப்பூ மாலைகள் என்னஎம்
மக்கள் சிதைந்து மரித்தாரே!
அந்திசெவ் வானமாய் நந்திப் பெருங்கடல்
அருந்தமிழ்க் குருதியில் ஆனதுவே!
சிந்திய கண்ணீர் ஆறுகள் பெருகிச்
செங்கடல் நந்தியில் போயினவே.

6

குயில்கூவும் காட்டினிலே குள்ளநரிக் கூட்டம்மா
குரல்வளையைக் கடித்துக் குதறுதம்மா!
மயிலாடிக் களித்தவன்னி மாகுண்டால் எரிந்தம்மா
மண்மேடாய்த் தமிழீழம் ஆனதம்மா!
மைம்மா முகில்தடவிச் சிரித்தமுல்லை மாடமெல்லாம்
மகிந்தபேய் கால்குதித்து ஓடுதம்மா!
செய்யபுகழ்க் கதிர்விரிந்த செந்தமிழ்மா ஈழமெல்லாம்
சேர்ந்தஇருள் கார்பரவிக் கவிந்ததம்மா!



7

கொற்ற மன்னன் கொள்கைத் தலைவன்
 கோமான் எங்கள் பிரபாகரன்
முற்றம் முழைத்தயெம் விடுதலை வாழ்வு
 முள்ளி வாய்க்காலில் முடிந்ததுவோ!
சுற்றும் பிணமலை சுடுபிணக் காடுகள்
 சோகம் சொல்லியழ உறவில்லையோ!
எற்றுக் கிறந்தோம் எவர்க்கிடர் புரிந்தோம்
 ஏன்எம் மண்ணில் எரிந்தோம்!

8

அன்னையென் தமிழே ஆருயிர்த் தேவிவுன்
 அடியினில் சிதறிச் சாய்கின்றோம்!
முன்னவர் வாழ்ந்த முள்ளிவாய்க் காலில்
 மூட்டிய கணைகளில் தீய்கின்றோம்!
சின்னவன் சிறியவன் சிங்களன் விரட்டிச்
 செந்தமிழ் ஈழம் காக்கின்றோம்!
மன்னவன் நாளை மணிமுடி புனைகையில்
 மலர்களாய் மாறிப் பூக்கின்றோம்!

9

வானில்வரும் மண்ணில்வரும்
 வண்கடலைக் கலக்கிவரும்
வல்லவன்எம் மன்னன்படை பாரடா!
 கானில்வரும் கடுகிவரும்
கரும்புலியாய்ப் பெருகிவரும்
 காடையனே நீயழிந்தாய் போரடா!
ஊனில்வரும் உயிரில்வரும் ஒண்டதமிழ்த்தாய்
 தேரும்வரும்
உத்தமர்நாம் சொல்லுகிறோம் கேளடா!
 தேனில்வரும் சேதிவரும்
தீந்தமிழ்மா ஈழம்வரும்
 தேம்பியவர் குறித்துவைத்தோம் நாளடா!

குருசாமி அரசேந்திரன்

# மனித உரிமைகள் ஒரு விளக்கம்

ந. மாலதி

**மனித உரிமைகள் என்ற சொல்லுக்குரிய விளக்கங்களை தொடராக சில ஆக்கங்களில் எழுதலாம் என்ற எண்ணத்தில் பின்வரும் பட்டியலை ஆரம்பமாக வைத்து சில ஆக்கங்கள் தொடராக வருகிறது.**

(1) பழமையான சமூகங்களில் எவ்வாறு இது கையாளப்பட்டது?

(2) அண்மைய வரலாற்றில், 1940 களில், இது எவ்வாறு உருப்பெற்றது?

(3) பிற்காலத்தில் மனித உரிமைகள் பிரகடனம் கையாளப்படும் விதம்.

(4) மனித உரிமை கருத்தாக்கத்தின் பின்னணி.

## அறம் – நீதி – மனித உரிமை

### பாகம்–1

மனிதர்கள் ஓரிடத்தில் தங்கி பயிர் செய்து வாழத் தொடங்கி ஏறக்குறைய 10,000 ஆண்டுகளாகி விட்டன. மனித உரிமைகள் என்ற கருத்து பிரபலமாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் தான் ஆகின்றன. அதாவது ஓரிடத்தில் வாழ தொடங்கியதில் மிகச் சொற்பமான ஒரு வீதமான பிற்காலத்தில்தான் மனித உரிமைகள் என்ற கருத்து எம்மை ஆட்கொண்டுள்ளது. அவ்வாறானால் முந்தைய 99 வீதமான காலத்தில் மனிதர்களிடம் நீதி இருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. மனித உரிமைகள் என்ற கருத்தாக்கத்தை புரிந்து கொள்வதற்கு இந்த 99 வீதமான காலப் பகுதியில் நாம் எவ்வாறு நீதியை கடைப்பிடித்தோம் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆயிரமாண்டுகளுக்கு மேல் பழமையான எந்தவொரு சமூகத்தை எடுத்தாலும் அங்கு நீதி பற்றிய நடைமுறையில் உரிமை என்ற சொல்லை காணவே முடியாது. மிகப் பழமையான சமூகங்கள் நீதியை எவ்வாறு கையாண்டுள்ளனர் என்ற ஒரு சுற்றுநோக்கில் இம்முதலாவது பாகம் அமைகிறது.

பழமையான சமூகங்களில் ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற நீதி நெறிகளே இருந்தன அல்லாமல் ஒருவருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்று சொல்லப்பட்டிருக்கவில்லை.

அக்காலத்திலேயே எழுத்து வடிவம் கொண்ட மொழியை பேசிய மக்களாகட்டும் எழுத்து வடிவம் இல்லாத மொழியை பேசிய மக்களாகட்டும் இதுவே உண்மை. இதற்கு உதாரணமாக அக்காலத்திலேயே எழுத்து வடிவம் கொண்ட மொழியாகிய தமிழ் மொழியை பேசிய தமிழர்களையும் ஆபிரிக்க சமூகங்களையும் எடுத்துக்கொள்வோம். மேலதிகமாக இன்றைய இரான் நாட்டு நிலத்தை மையமாக கொண்ட பழைய பபிலோனியாவின் அரசன் ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன்னர் பொறித்த ஹமுராபி என்ற நீதிக்கல்லில் உள்ளதையும் பார்ப்போம். இவற்றில் எங்கேயும் உரிமை என்ற கருத்துள்ள சொல் இருந்ததாக எவரும் சொல்லவில்லை.

4000 ஆண்டுகள் பழமையான பபிலோனியாவின் ஹமுராபி சட்டங்கள் ஏழு அடி உயரமான கல்லில் அக்காடியன் மொழியில் cunieform எழுத்தில் எழுதி உள்ளது. உலகத்தில் சட்டங்களாக எழுதப்பட்டவற்றில் மிகப் பழமையானது ஹமுராபி சட்டங்கள் என்கிறார்கள். இவற்றில் சில சட்டங்கள் கொடியனவாக இருக்கின்றன. இம்மாதிரியான நீதியே பழி தீர்ப்புநீதி (retributive justice) என்று சொல்லப்படுகின்றன. இச்சட்டங்களில் சமத்துவமும் இல்லை. ஒருவரின் வகுப்புக்கு ஏற்றவாறு தண்டனைகளும் மாறுகின்றன.

ஆபிரிக்காவின் செனகோலிலுள்ள ஒரு மக்களிடம் நிலவிய நீதி முறையை பற்றி பேசும் போது இவ்வாறு விபரிக்கிறார் ஒரு ஆய்வாளர்.

“தீர்ப்பு சொல்பவருக்கான அதிகாரம் எழுதப்படாததாகவும், சக மனிதர்கள் மேலுள்ள மதிப்பினாலும் பூமியிடமிருந்து பெறப்பட்ட நீதியாலும் கிடைக்கிறது. அதனால் சமூகத்தில் மதிக்கப்படும் மூத்தோர் சிலர், நிலத்தோடு அவர்களுக்கிருக்கும் நீண்ட நெடிய தொடர்பினால் இந்த அதிகாரத்தை பெறுகிறார்கள்.

அவர்களின் தீர்ப்பு, வழக்கின் இரு சாராருக்கும் திருப்தி தருவதாகவே இருக்க முடியும். இந்த மன நிலையில் இருந்து தீர்ப்பை கொடுக்கும் போது இரு சாராருக்கும் திருப்தி கிடைக்காவிட்டால் அத்தீர்ப்பு பிழையானதாகவே கணிக்கப்படும். இதைவிட ஒரு மெய் நிகழ்வில் இருந்து பிரிந்து நிற்கும் நீதி என்றறொரு கருத்தாக்கம் கிடையாது. சட்டங்களும் கிடையாது."

எழுதப்படாத மொழியை பேசிய மக்கள் சமூகங்க-ளில் நீதி எவ்வாறு பேணப்பட்டது என்பதற்கு மேற் கூறியதை சிறந்த உதாரணமாக கொள்ளலாம். இம்மாதிரி இருதரப்பிற்கும் திருப்தி கொடுப்பதாக அமையும் நீதியே நலமீட்பு நீதி (restoratie justice) என்கிறோம். அவர்களின் நீதி அவர்களின் நிலத்தோடும் அதனோடு ஒட்டி வளர்ந்த அவர்களின் வாழ்க்கை முறையோடும் ஒன்றி இருந்தது. இங்கு உரிமை என்ற சொல் வரவில்லை. அதுமட்டுமல்ல பழமையான ஆபி ரிக்க சமூகத்தில் நலமீட்பு நீதி அன்றும் இன்றும் பரவ லாக கையாளப்படுகிறது என்றும் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

பழமையான சமூகங்களில் நலமீட்பு நீதியே ஆழ மாக வேரூன்றி இருந்தது என்றாலும் பழிதீர்ப்பு நீதியே வாழ்க்கைக்கு பொருத்தமானது என்ற தவறான கருத்து நிலவி வந்துள்ளது. காரணம், நலமீட்பு நீதியை பின்பற்றும் சமூகங்கள் பலமற்றவை என்றும் பழி தீர்க்கும் கலாச்சாரம் கொண்ட வந்தேறிகள் நலமீட்பு நீதியை பின்பற்றும் சமூகங்களை அழித்து விடுவார் கள் என்றும் நம்பப்பட்டது. அதனாலோ என்னவோ காலனியத்தை தொடர்ந்து அண்மைக் காலம் வரை பழிதீர்ப்பு நீதியே உலகில் பரவலாக கையாளப்படு-கிறது. ஆய்வாளர்கள் மத்தியில் நலமீட்பு நீதியில் இப்போ கவனம் திரும்பியிருக்கிறது என்று சொல்லலாம்.

தமிழர்களின் பழமையான நீதி முறைகளைப் பற்றி பேசுவதானால் திருக்குறளும், கண்ணகியும், மனுநீதி கண்ட சோழனும், பாரி மன்னனும் கவனத்தை ஈர்ப்பா ர்கள். அறம் என்றொரு பொருள் புதைந்த சொல்லே தமிழர்களின் நீதியை குறிப்பதாக கொள்ளலாம். இன்று இச்சொல்லின் முழுமையான பொருளை எமது நாளாந்த வாழ்க்கையோடு பொருத்தி நாம் பொருள் கொள்கிறோமா என்பது சந்தேகமே. அதற்கு கார ணமும் எமது தற்காலத்திய வாழ்க்கை முறைதான்.

tamilvu.org என்னும் தமிழ் இணையக் கல்விக்கான தளம் தமிழ் பற்றியும் தமிழர் பற்றியும் அறிந்து கொள் வதற்கு மிகவும் துணை போகும். அதில் தமிழ் அறநூ ல்கள் பகுதி இவ்வாறு கூறுகிறது.

அறம் என்றால் என்ன? என்ற வினா எழுப்பினால் அதற்கு விடை காண்பது கடினமானது. மனிதன் தன-க்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைக-ளின் தொகுதியே - முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்.

தமிழில் பதினெண்கீழ்கணக்கு நூல்களில் பல, திரு க்குறள் உட்பட, அறநூல்கள் என்றே சொல்லலாம்.

மீண்டும் tamilvu.org இலிருந்து

"அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்ப்போம். செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத் தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அற மாகும். மன மாசு என்பது யாது? மன மாசினைப் போக் குவது எவ்வாறு? பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை மனமாசுகளாகும். அவை இல்லாமல் இருப்பதே அறம். இதையே குறளாசிரியர்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற (குறள் - 34)

என்றும்,

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம் (குறள் - 35)

என்றும் கூறுகிறார். இவ்விளக்கங்களின் அடிப்-படையில் பார்க்கும்போது அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்று என்று கொள்ளலாம். இத்தகைய அறம் பற்றிப் பேச எழுந்-தவையே அறநூல்கள். அறநூல்களுக்கு உயிராக இருப்பது கருத்து. அறக் கருத்துகளையும் இலக்கி யச் சுவை என்னும் இனிப்பிலே கலந்து கொடுக்க-ப்படும்பொழுது அவை அற இலக்கியங்கள் ஆகி-ன்றன.

மேலும், newindianexpress.com செய்தி தளத் தில் 2010 இல் இப்படி ஒரு செய்தி "Ancient Tamils had a secular legal system". அதாவது பழம் தமி ழரிடம் சமயசார்பற்ற நீதிநெறிமுறை இருந்தது என்பதே செய்தி. இதை அப்போது சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருந்த உலக தமிழ் ஆராய்ச்சி மாகாநாட்டில் பேராசிரியர் மனோன்மணி ரத்னவேல் தனது ஆய்வுகளின் முடிவாக இக்கருத்தை சொன் னார். அதற்கு ஆதாரமாக திருக்குறளின் செங்கோ ன்மை அதிகாரத்தையும் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் என்ற சொல்லை விளக்குவதற் காகவே இக்கட்டுரை காலத்தில் பின்னோக்கி இதற்கான அடையாளங்களை தேடியது. அக்கா லத்தில் அறம், ஒழுக்கம், நீதி என்ற சொற்களே கையாளப்பட்டன என்ற முடிவுக்கு வர முடிகிறது. அப்படியானால் மனித உரிமைகள் என்ற கருத்தா க்கம் எவ்வாறு உருப்பெற்றது என்பதை அடுத்த ஆக்கத்தில் பார்ப்போம்.

# ஒரு முன்னாள் பெண்போராளியின் வாழ்வியல் பதிவுகள்

**கலாநிதி துரை மனோகரன்**

இலங்கையின் நவீன தமிழ் இலக்கியம் புத்தம் புது இலக்கியப் போக்குகளைக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் எண்பதுகளுக்குப் பின் இலங்கையின் நவீன இலக்கியம் இரு முக்கிய கிளைகளையும் உள்ளடக்கியதாக வளர்ந்து வந்துள்ளது. ஒன்று, புலம்பெயர் இலக்கியம். மற்றது, போர் இலக்கியம். இந்த இருவகை இலக்கிய முயற்சிகளும் இலங்கைக்கே தனித்துவமானவை. போரினால் ஏற்பட்ட தாக்கங்களும் பாதிப்புகளும் மிக அதிகம். அவற்றை ஈழத்து எழுத்தாளர் பலர் தமது படைப்புகளில் வெளிக்கொணர்ந்துள்ளனர். அதே வேளை, போரில் ஈடுபட்ட போராளிகளில் எழுத்தாற்றல் உள்ளவர்கள், போரியல் நிகழ்ச்சிகளையும், அதனோடு, இணைந்த வாழ்வியலையும் தமது எழுத்துக்களில் பதிவு செய்துள்ளனர். இவ்வகையில் பெண் போராளிகளின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில், ஒரு முன்னாள் பெண் போராளியான மலைமகளின் புதிய கதைகள் என்னும் சிறுகதைத் தொகுதி நோக்கப்படுகிறது.




மலைமகளின் இச்சிறுகதைத் தொகுதி 2004 இல் வெளிவந்தது. இத்தொகுதியில் பதினைந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது சிறுகதைகள் பல வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்ததோடு ஒரு வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன. சில கலை, இலக்கியப் போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்றுள்ளன. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு சிறுகதை சரிநிகர் பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது. பத்திரிகையில் வெளிவராத சில சிறுகதைகளும் இத்தொகுதியில் அடங்குகின்றன. இதில் இடம் பெற்றுள்ள சில சிறுகதைகள் கனவுக்கு வெளியேயான உலகு (2002), வேர்கள் துளிர்க்கும் (2003) ஆகிய சிறு கதைத் தொகுதிகளிலும் வெளி வந்துள்ளன.

மலைமகள், தாம் இந்தச் சிறுகதைகளை எழுத முன் வந்தமைக்கான நோக்கத்தைச் 'சொல்லாத செய்திகள்' என்ற தமது முன்னுரையில் தெரிவித்திருக்கின்றார்.

"நடைமுறை வாழ்வியல் அசைவியக்கத்தின் அச்சாணியாகப் பெண்கள் இருக்கின்ற போதும், அவர்கள் கௌரவிக்கப்படுவதில்லை என்ற கோபம் எனக்கு நிறையவே உண்டு. பெண்கள் என்ற ஒரே யொரு காரணத்துக்காக, விளைவை ஏற்படுத்தவல்ல செயல்களைச் செய்துவிட்டும் பேசாதிருப்பவர்கள் என்பதற்காக ஓய்வெடுக்கவும் நேரமின்றி இப்போதும் விழித்திருக்கும் என் தோழிகள் பேசப்படாதவர்களாகப் போய் விடுவார்களோ என்ற பயத்தினாலேயே நான் எழுத முனைந்தேன்".

மரபுகளை மீறுதலும், தடைகளைத் தாண்டி எல்லையற்ற வெளியில் உலவுதலும் சிறுவயதில் இருந்தே தமது இயல்புகள் என்றும் அவர் குறிப்பி ட்டுள்ளார். துணிச்சலும், திறமையும், அறிவுத்தி றனும், சிறப்பான எழுத்தாற்றலும் கொண்ட படைப் பாளியாக மலைமகள் இச்சிறுகதைகளினூடாகத் தம்மை இனங்காட்டிக் கொள்கின்றார். அவரது எழு-த்துநடை பற்றி, 'காலத்தின் சாட்சி' என்ற தலைப் பில் எழுத்தாளர் தாமரைச்செல்வி குறிப்பிட்டிருப்-பது மிகப் பொருத்தமானது.

"மலைமகளுக்கு தான் சொல்ல விரும்பியதைச் சொல்வதற்கு அழகான எழுத்துநடை கைகொடு-க்கிறது. அவரது உணர்வும் சிந்தனையும் பேனா முனையும் இணைந்து இயல்பான கதைகூறலை நிகழ்த்திவிடுகிறது. தனக்கென ஒரு எழுத்து நடையை இவர் எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த நடை இயல்பானது. சிக்கனமான வார்த்தை-தகளில் அதிகளவு தாக்கத்தைத் தருவது. கேலி யும் கிண்டலும் குறும்பும் சேர்ந்து வாசிக்கும் ஆர்வ த்தை உருவாக்குவது பாத்திரங்களோடு ஒன்றிப் போக வைப்பது".

உண்மையில் மலைமகளின் கதை சொல்லும் திறனுக்குக் கைகொடுப்பது, அவரது எழுத்து நடை யாகும்.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைக-ளில் பயணம், எதுவரை, யார் உன்னை அழைத் தார், முற்றுகை, இறுதிவணக்கம் என்பவை போர் அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. காணியும், மில்லும் இல்லாவிடின் கல்யாணமே தடைப்பட்டுப் போகக் கூடிய நிலையில் உள்ள முகமே தெரியாத யாரோ ஓர் அக்காவுக்காக நிலத்தை மீட்கமுனை யும் பெண்போராளிகளின் உணர்வுகளை 'விலை' என்ற சிறுகதை அழகாக உணர்த்துகின்றது. உணவுக்காகப் பெண் போராளிகள் பட்ட கஷ்டங்-களைச் சுவாரசியமாக 'ஒரு கோப்பைத் தேநீர்' தருகிறது. புதிய தலைமுறைப் பெண் போராளிக-ளின் போக்கைப் 'புதிய கதைகள்' என்ற சிறுகதை காட்டுகிறது. போர்க்காலச் சூழலில் பெண்கள் பட்ட அவஸ்தைகளை 'முருங்கையைவிட்டு இறங்கா தவர்கள்' சொல்கிறது. போராளியாகக் குடும்-பத்தை விட்டுப் பிரிந்து சென்ற தன் அக்காவைப் பற்றிப் பெருமிதம் கொள்ளும் ஒரு தங்கையின் உணர்வுகளை 'ஆங்கோர் காட்டிடைப் பொந் திலே' என்ற கதை காட்டுகிறது. 'அனுமதி' என்ற சிறுகதை, சொந்த மண்ணைப் பார்ப்பதற்கு அனு-மதி பெறவேண்டிய நிலையை எடுத்துக் காட்டுகிறது.

எனது மனிதர்கள் - எனது மனிதர்கள் 2 என்பன, வியக்கத்தக்கவர்களாகவும், மனிதாபிமானம்



கொண்டவர்களாகவும் விளங்கும் மனிதர்கள் பற் றிச் சொல்கிறது.

'யாரோ யாரிவர் யாரோ' என்ற கதை ஆனை அடக்கிய அரியாத்தையில் தொடங்கி, பெண் போராளிகளின் வீரதீரச் செயல்களைச் சொல்கி றது. 'கதவுகள் திறந்துதான் உள்ளன' என்ற படை-ப்பு, பெண்ணியம் சார்ந்த சிறந்த சிறுகதையாக விளங்குகிறது. வரலாற்றுப் போக்கில் பெண்ணு-க்கு நிகழ்த்தப்பட்டு வந்த அநீதிகளையும் பாதி-ப்புகளையும் வெளிப்படுத்துவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

பெரும்பாலான சிறுகதைகள் பெண் போராளி ஒருவரே கதை கூறுவதாக அமைந்துள்ளன. இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள படைப்புகளில், பெண் போராளிகள் தொடர்பான வாழ்வியல் பதிவுகள் பொதிந்துள்ளன. நவீன தமிழ் இலக்கி யத்தைப் பொறுத்தவரை, இப் பதிவுகள் புதிய தளத்தை உணர்த்துவனவாக உள்ளன.

இறுக்கமான, நெருக்கடியான, உயிராபத்து உள்ள வேளைகளில் கூட பெண் போராளிகள் எவ்வாறு இயல்பாக இயங்கினார்கள் என்பதைப் பல சிறு கதைகள் சுவாரசியமாக உணர்த்துகின்றன. 'விலை' என்ற சிறுகதையில் மயூரி என்ற பாத்திரம் கதை சொல்லிவரும்போது இவ்வாறு குறிப்பிடுகி றது:

"மரம் நிறையப் பூக்கள். காற்றோடு சேர்ந்து அசைந்து ஒன்றுடன் ஒன்று உரசி ஏதோ இரகசியம் பேசிச் சிரித்துக் கொண்டன. எங்களைப்போல சிரி ப்பதைத்தவிர வேறென்ன வேலை எங்களுக்கு?...

சண்டைக்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்த போதும் இப்படித்தான் அணிகளைப் பிரிப்பதும் நகர் த்துவதுமாக அவசர வேலைகள் நடந்த நேரம்கூட எங்களின் சிரிப்பு ஓயவில்லை. எல்லோரும் அல்லோ

லகல்லோலப்பட, நாங்கள் இரகசியங்கள் பேசிச் சிரித்துக் கொண்டோம். கதைத்துச் சிரிக்க ஆயிரம் விடயங்களிருந்தன எங்களிடம். அணிகளை அமைதியாக இருக்கும்படி அதட்டிய பொறுப்பாளர்களின் குரலையும் மீறி, ஏதோ இனி இப்படிச் சிரிக்க நேரம் வராது என்பது போலவும், இதுதான் கடைசிச்சிரிப்பு என்பது போலவும் அடக்கமாட்டாமல் சிரித்துக் கொண்டிருந்தோம்".

பெண் போராளிகள் எவ்வாறு குறும்புத்தனமாக நடந்து கொண்டார்கள் என்பதை, 'எதுவரை' என்ற சிறு கதையில் இடம்பெறும் உரையாடல்களும் கலையாக உணர்த்துகின்றன. ஒருத்தி பதுங்குகுழிவெட்டிக்கொண்டிருப்பவர்கள் குவித்த மண்கும்பிமேல், மெத்தையில் படுப்பதுபோல் படுத்துக் கொண்டு கால்களை ஆட்டியவாறு, 'சரி சரி, வேலை செய்து களைச்சுப் போனம். அந்த றோல்ஸையும் தக்காளி சோசையும் கொண்டு வாங்கோ. சாப்பிட்டுவிட்டு வேலை செய்வம்", என்றாள். இன்னொருத்தி, "ஏன்ரி இல்லாததுகளை நினைவுபடுத்தி வாயைப் பழுதாக்கிறாய்" என்று அவளை அடக்கினாள்.

அதே சிறுகதையில் இரு பெண் போராளிகளுக்கிடையில் இவ்வாறு உரையாடல் நிகழ்கிறது:

"சத்தம் போடாதையுங்கோ. நிலம் வெடிக்கப் போகுது. வீட்டில் இருந்தா இப்படியெல்லாம் குதியன் குந்தியிருப்பியளே? சத்தம் போடாமல் ஒரு மூலையில் இருந்திருப்பியள்".

"அதுதானே வீட்டில இல்லாமல் இஞ்சவந்து நிக்கிறம்".



பெண் போராளிகளுக்கு ஏற்படும் உணவுப் பிரச்சினையை 'ஒரு கோப்பைத் தேநீர்' என்ற சிறுகதை சுவாரசியமாக விளக்குகிறது. அதிலிருந்து சில பகுதிகள்:

"காலையில் பிட்டும் கறியும், மதியம் சோறும் கறியும், இரவு பிட்டும் கறியும்"

பரவாயில்லை. பின்னர், காலையில் பிட்டும் கறியும், மதியமும் இரவும் சோறும் கறியும், இதுவும் பரவாயில்லை.

கொஞ்ச நாளின் பின்,

மூன்று நேரமுமே சோறும் கறியும்,

அதுவும் எப்படியென்றால், காலையில் சோறும் கத்தரிக்காய் கறியும், மதியம் கத்தரிக்காய் கறியும் சோறும், இரவு சோறும் கத்தரிக்காய்க் கறியும்... இன்னும் கொஞ்சநாளின் பின், காலையில் கஞ்சி, மதியமும் இரவும் சோறும் கத்தரிக்காயும், கத்தரிக்காயும் சோறும்"

அவர்கள் "கத்தரிக்காயைக் கண்டு பிடித்தவன் நாசமாய்ப் போக!", "கத்தரித்தோட்டம் வைத்திருப்பவர்கள் தலையில் இடிவிழ!" என்று சபித்துக் கொண்டே சாப்பிடுவார்கள்.

உணவு நெருக்கடி அவர்களை எவ்வாறு செயற்பட வைத்தது என்பதைப் பின்வரும் பகுதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

"கத்திரிக்காயுடன் எங்கள் விருப்பத்துக்கு மாறாக கைகோர்த்துக் கொண்ட காரணத்தால், சோற்றுப்பைகள், கேட்பாரற்று தலைமேல் மரக்கிளைகளில் தொங்கின. அண்ணாந்து பார்த்தால் கோபம் தான் வரும். கூடவே கவலை வரும். இதைப்போய் எறிவதா? என்னவென்று? எம் மக்கள் ஒரு நேர உணவுக்கே அல்லாடிக் கொண்டிருக்கையில், இவ்வளவு சோற்றையும் வெட்டிப் புதைப்பதா?

மனம் கேட்கவில்லை..

காப்பரணைப் பலப்படுத்தவெனத் தரப்பட்டிருந்த உரப்பைகளுள் நல்லதாக ஒன்றை எடுத்துக் கழுவி உதறி வெயில் படக்கூடிய இடமாகப் பார்த்து, விரித்து, அதன்மேல் சோற்றுப் பருக்கைகளைப் பரப்பிக் காயவிட்டு மீண்டும் அரிசியாக்கினோம். தேநீர் சுடவைக்கும் அலுமினியப் பாத்திரத்தில் அதைக் கொட்டிக் கிளறிச் சூடேற்றி அடுப்பிலிருந்து இறக்கி, அந்தப் பாத்திரத்தில் வைத்தே இடித்துப் பொடியாக்கினோம். வெகு அபூர்வமாக வந்த பிட்டையும் கூட காய வைத்து வறுத்தோம். கை தவறிக்கூட ஒரு சோற்றை கீழே போடமாட்டோம்.

வெளியே உணவு நெருக்கடி அதிகரிக்க, எம் கையிருப்பிலுள்ள சீனியின் அளவு குறையத் தொடங்கியது. தேநீரில் சீனி கலந்து குடிப்பதில் சிக்-



கல் ஏற்பட்டது. சீனியைத் தொட்டுத் தேநீர் குடிக்கத் தொடங்கி, அதிலும் நெருக்கடி ஏற்பட, கையிலிருந்த சீனியைப் பொரிமாவுடன் கலந்துவிட்டு, அதனோடு தொட்டுத் தேநீர் குடிக்கத் தொடங்கினோம். தேநீருடன் கொறிப்பதற்கான உப உணவாகச் செய்து வைத்திருந்த பொரிமா கடைசியில் தேநீருக்கான மூலப்பொருட்களுள் ஒன்றானது.

வீரைப்பழக் காலங்களில் வீரைப்பழம் பாணியுடனும், பாலைப்பழக் காலங்களின் பாலைப்பழப் பாணியுடனும் சிலநேரம் உலுவிந்தம் பழப் பாணியுடனும் என்று அந்த ஒரு கோப்பை தேநீரை, எங்கள் அபிமானத் தேநீரை விதம் விதமாகக் குடித்தோம்.

ஒரு கோப்பை தேநீர் தரும் மன உற்சாகத்துடன், கஞ்சியும் கத்தரிக்காயும் தந்த பலத்துடன் கடமையில் கண்ணாயிருந்தோம்".

இவர்களின் உணவுப் பிரச்சினையைக் கவனித்த ஆண் போராளிகள் ஏங்கிப்போய், "என்ன பிள்ளையளே, இந்த சாப்பாட்டைச் சாப்பிட்டோ இந்த மாதிரி...?" என்று மலைத்துப் போனார்கள். இடையிடையே தாம் சாப்பிடுவதற்காகக் கொண்டு வந்திருந்த சொக்கிலேட்களைப் பெண்போராளிகளுக்கும் கொடுப்பார்கள். அவர்கள் கொடுப்பதை இவர்கள் சாப்பிடாமல் காற்சட்டைப் பைகளுள் போட்டுக் கொள்வார்கள். அவர்களுக்கு இடையிலான உரையாடல் சுவாரசியமானது.

"ஏனக்கா சாப்பிடாமல பொக்கற்றில் வைக்கிறீங்கள்? நீங்கள் இதைச் சாப்பிடுங்கோ, உங்கட ஆக்களுக்குக் கொண்டு போய்க் குடுக்கிறதுக்கு நாங்கள் வேற ரொபி தாறம்."

"நாங்கள் இந்த ரொபியோடதான் அண்ணை ரீ குடிக்கிறனாங்கள். எங்களிட்டச் சீனி இல்லை". "இந்த நாலைஞ்சும் உங்களுக்கு எந்த மூலைக்குக் காணும் அக்கா? ஒரு ரீ குடிக்க உங்களுக்கு எத்தனை ரொபி வேணும்?"

"ஒரு ரொபியில நாலுதரம் குடிப்பம்". ஆண் போராளிகள் பெண் போராளிகளுக்கு வழங்கிய பாதுகாப்பினைப் பற்றியும் சிறுகதையொன்றில் விபரிக்கப்பட்டுள்ளது.

போர்ச்சூழலில் பெண்களுக்கு ஏற்பட்ட பல்வேறு சங்கடங்களை 'முருங்கையை விட்டு இறங்காதவர்கள்' காட்டுகின்றது.

பெண் போராளி ஒருவருக்குச் சோதனைச் சாவடியொன்றில் சங்கடமான நிலை ஏற்பட்டது. அவளைப் பார்த்து இன்னொரு பெண் போராளி இவ்வாறு சொன்னாள்.

"காலையில் நீங்கள் போனாப்பிறகு, முன்வீட்டுப் பிள்ளை கொஞ்சநேரம் வந்து கதைச்சுக்கொண்டிருந்தா. நேற்றையான் கதையைச் சொன்னன். நாங்கள் இஞ்ச வாறதுக்கு முதல், பள்ளிக்கூடம் போய் வாற நேரங்களில் தங்களுக்கும் பொடிச் செக்கிங் நடக்கிறதாம். திடீரெண்டு ரவுண்டப் பண்ணி மறிப்பாங்களாம். றோட்டிலேயே தங்கடை வெள்ளைச் சட்டையைத் தூக்கிப் பாக்கிறவையாம். அதுக்காகவே தாங்கள் அந்த நாட்களில பள்ளிக்கூடம் போறதில்லை எண்டு அந்தப் பிள்ளை சொல்லிச்சு".

'யார் உன்னை அழைத்தார்கள்' என்ற சிறுகதையிலும் பெண்களுக்கு ஏற்படும் பிரத்தியேகமான பிரச்சினைகள் சொல்லப்படுகின்றன. போரில் இறந்து பட்ட பெண் போராளி ஒருத்தி பற்றி, அவளது தோழி நினைத்துப்பார்க்கிறாள்.

"அகல்யாவின் தெற்றுப்பல் சிரிப்புக் கணக்குகளுள் வந்து போனது. பார்ப்பதற்காகக் காலையில் நான் புறப்பட்டபோது, அகல்யா எழும்பியிருக்கவில்லை. 'வயிற்றுக்குத்து' என்று முனகினாள். வழமையாகவே இவள் வயிற்றுக்குத்து என்றால் சுருண்டு விடுவாள். நாங்களும் வேலை சொல்லமாட்டோம். வீட்டிலென்றால் எங்களை ஒரு வேலையும்

செய்யவிடாமல் அம்மாவே எல்லாம் செய்து, சின்ன மீன் வாங்கி அரைத்த கறி வைத்து, அது, இதுவென் றெல்லாம் பக்குவம் பார்ப்பார். இங்கு அதற்கேது நேரம்? ஆளை ஆறுதலாக விட்டு விடுவோம்".

இவ்வாறு, பெண்கள் தங்களுக்கான பிரச்சினைக-ளுடனேயே போராளிகளாகவும் திகழ்ந்தார்கள் என்பதை மலைமகள் தமது இரு சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

'புதிய கதைகள்' என்ற படைப்பில் பெண்க-ளின் புதிய போக்குகளை இனங்காட்டுகிறார். பாரதி கண்ட புதுமைப் பெண்கள் உண்மையிலே இலங்கை யிலேதான் தோன்றியுள்ளனர். "நிமிர்ந்து நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும்" கொண்ட பெண்கள் தோன்றத் தவற-வில்லை. இந்தக்கதையில், ஊர்வம்பு பேசுபவர்கள் பெண் போராளிகள் பற்றிப் பேசுவதைச் சுவாரசிய மாக மலைமகள் தருகிறார்:

"கடலில் கொஞ்ச மனிதர்கள் நீந்துகின்றார்கள். அது தெரிகிறது.

யார்அவர்கள்? அரைக்காற்சட்டைகளை அவர் கள் அணிந்திருக்கிறார்கள்."

'ஆம்பிளையளோ?'

தலையிலே முடி கொண்டயிட்டிருப்பது போலவும் தெரிகிறது. 'பொம்பிளையளோ?'

'என்ன பொம்பிளையளோ?'

'அதுவும் காற்சட்டையளோடையோ?'

'கடல் பொங்கி ஊரை அழிக்கிறதுக்குத்த-ான் உந்தக் கூத்தெல்லாம் நடக்குது?' 'அப்பிடி-யெண்டா வெள்ளைக்காரனின்ர கடலுமெல்லே பொங்கவேணும். அங்கை எல்லாரும்தானே குளி-க்கினம்?'

'அது ரோசமில்லாத கடல். பேசாமல் கிடக்கும். எங்கட கடல் அப்பிடியே'.

எத்தகைய மிகைப்படுத்தல்களும் பிரசாரங் களும் இன்றித் தமது கதைகளை நகர்த்துகிறார், மலைமகள்.

பெண் போராளிகள் போர்களில் ஈடுபட்டாலும், அவர்களிடத்தில் மனிதாபிமானமும் உண்டு என்-பதையும் மலைமகள் ஒரு சிறுகதையில் உணர்த் துகிறார். போரின்போது எதிராளிகளின்மீது வெறு ப்பும் கோபமும் ஏற்படும். ஆனால், அவர்கள் உயிரி-ழக்கும்போது அவையெல்லாம் இருந்த இடம் தெரி யாமல் பறந்துவிடுகிறது. 'யார் உன்னை அழை-த்தார்' என்ற சிறுகதையில் கதை கூறும் பாத்திரம் கூறும் கூற்று, தனை உணர்த்துகிறது. "உயிரோடு உள்ளபோது அவர்கள்மேல் எழும் கோபம் இறந்த-பின் ஏன் வருவதில்லை என்பது புரியவில்லை" என்கிறது, அப்பாத்திரம். மனிதாபிமானமும் இரக்க-மும் பெண் போராளிகளுக்கும் இருந்தன என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'கதவுகள் திறந்துதான் உள்ளன' என்ற சிறுகதை பெண்ணி யம் சார்ந்த சிறந்த படைப்பாக விளங்குகிறது. காலங்காலமாக வரலாறு பெண்ணுக்கு இழைத்த அநீதிகளையும், அதனால் அவளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் உயர்ந்த படைப்புத்திறனோடு அச் சிறுகதை சொல்கிறது. ஜனகனின் மகாசபை யில் பிரம்மவாதியான யக்ஞவல்லியலுடன் பிரம்மம் பற்றிக் கருத்தாடல் செய்த பெண் தத்துவ வாதி யான கார்க்கியை அவன் அவமதித்தமை, சாளுவ மன்னன் கூல்வனுடன் மனத்தால் ஒன்றியி ருந்த அம்பையைத் தன் தம்பி திருதராட்டினனுக்-குத் திருமணம் செய்விப்பதற்காக அவளது இரு சகோதரிகளுடன் பீஷ்மன் தூக்கிச் சென்றதனால், அவளைச் சால்வன் வெறுக்க, பின்னர் உண்மை அறிந்து அவளைத் தன் தம்பிக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது என பீஷ்மன் மறுக்க, இருவராலும் திருமணம் மறுக்கப்பட்ட அம்பையின் பரிதாப நிலை, எவனோ ஒருவனின் கதையைக் கேட்டுச் சீதையை ஐயுற்ற இராமனின் கொடூரம், வேடம் புனைந்து வந்து அகல்யையை ஏமாற்றிய இந்திரனின் கபடம், தானும் இந்திரனிடம் ஏமாந்து விட்டுத் தன் ஆற்றாமையால் அவளைச் சினந்த கௌதமனின் அநீதி என்று வரலாறு பெண்ணுக்கு எழுதிவைத்த அக்கிரமங்களையெல்லாம் பெண் எடுத்துக் கூறுவதோடு? இனியும் தான் ஏமாறத் தயாரில்லை என்றும், நல்ல மனிதர்களின் வருகைக்காகத் தனது மனத்தின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்தபடியேதான் இருக்கும் எனவும் அவள் தெரிவிப்பதாக இச்சிறுகதை அமை ந்துள்ளது. மலைமகளின் ஆழ்ந்து அகன்ற அறி-வுத்திறனையும் எழுத்தாற்றலையும் பெண்ணிய நிலை நின்று இப்படைப்பு மிகச் சிறப்பாக எடு-த்துக்காட்டுகின்றது.

இலங்கையின் தமிழ்ச் சிறுகதைத் துறையில் போரியல் சார்ந்த அனுபவ வெளிப்பாடுகளையும், பெண்ணிய நிலை நின்று அவற்றை வெளிப்படுத்தும் திறனையும், ஆற்றல் மிக்க எழுத்து ஆளுமையை யும் மலைமகளின் சிறுகதைகள் இனங்காட்டுகி ன்றன. கடுமையான போர் நிலைகளுக்கு மத்தி யில், நெகிழ்ச்சியான கதாசிரியையாகத் தம்மை நிலைப்படுத்திய மலைமகளின் எழுத்தாற்றல் உண்மையில் பிரமிக்க வைக்கிறது. தமது சிறு கதைகள் ஊடாக அவர் தரும் வாழ்வியல் பதிவுகள் அற்புதமானவை.


# மெழுகுவர்த்திகள்

வெள்ளைப் பறவைகள் அன்னநடை போடும் அந்தக் கல்லூரி வாசலில் தினமும் அவளுக்காகக் காத்திருப்பான் அவன். யாழ் நகரின் பிரபல பெண்கள் கல்லூரியில் அவளும் பிரபல ஆண்கள் கல்லூரியில் அவனும் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். அவள் பெயர் நிலா. அவன் பெயர் நித்யன். தினமும் நிலாவின் வீட்டு வீதியில் இருந்து அவளது பாடசாலை வரை அவளைப் பாதுகாப்பாக பின்தொடர்ந்து விட்டுச் செல்வான் நித்யன். நிலாவும் நித்யனும் ஒரு நாளும் நேரடியாகக் கதைத்தது இல்லை. ஆனால் நிலாவுக்குத் தெரியும் நித்யன் அவளுக்காகத் தான் தினமும் காத்திருக்கிறான் என்று.

நிலாவின் குடும்பத்தில் நிலா தான் மூத்தவள். அவளுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் என்று அளவான குடும்பம். அவர்களது குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவில்லை. அவளது அப்பா நல்ல சம்பளத்தில் அரசாங்க வேலையில் இருந்தார்.

நிலாவினது அப்பா நாட்டுப்பற்று மிகுந்தவர். தினமும் வீட்டில் போராட்டம் பற்றியும் போராளிகளின் தியாகங்கள் பற்றியும் கதைப்பார். அதைக் கேட்டுக் கேட்டு நிலாவுக்கும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பற்றும் பாசமும் வந்தது. தினமும் தனக்கு அடுத்த தங்கையுடனும் பக்கத்து வீட்டு அக்காவுடனும் இயக்கத்துக்குப் போறதைப் பற்றிக் கதைப்பார்.

1995 காலப்பகுதி, எமது ஈழ விடுதலைப்போராட்டம் உச்சம் பெற்ற காலப்பகுதி அது. வலிகாமப் பகுதியினை எதிரியானவன் கைப்பற்றி வந்த போது எமது போராளிகள் முன்னேறிப் பாய்ச்சலூடாக சமரிட்ட காலம். எதிரியானவன் எம் மக்கள் மீது விமானக் குண்டுவீச்சுக்களையும் எறிகணை



வீச்சுக்களையும் அள்ளி வீசிக்கொண்டிருந்தான்.

காலவோட்டத்தில் எதிரி எம் மக்களுக்கு அளித்த இன்னல்களைக் கண்டு அவற்றைக் களைய நிலாவும் போராளியாகினாள். அடிப்படைப் பயிற்சி முகாமில் புடம்போடப்பட்டு, நஞ்சுமாலை அணிந்த வரிப்புலி ஆகினாள். திறமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எமது இயக்கத்தில் அவளது திறமையும் இனங்காணப்பட்டு போராளிகளின் உயிர் காக்கும் மருத்துவப் போராளியாக உள்வாங்கப்பட்டாள்.

அன்றும் வழமை போல காயப்பட்ட போராளிகளுக்கு தாயாக அவள் தனது பணியினை மேற்கொண்டு இருந்தபோது, சக தோழி ஒருத்தி, "வயிற்றுக் காய கேஸ் ஒன்று வந்திருக்கு அவசரமாக தியேட்டருக்கு வரட்டாம்" என்று அறிவிப்பு வந்திருக்கு என்று கூறினாள். நிலாவும் அவசரமாக தனக்கிடப்பட்ட பணிக்கு விரைந்து சென்றாள்.

அங்கே அவளது நித்யன் மயக்க நிலையில் இருந்தான். நிலாவுக்கு உலகமே தட்டாமாலை சுற்றியது போல இருந்தது. அவன் காயப்பட்டு வெகு நேரமாகி, கொண்டு வர நீண்ட நேரமாகி விட்டமையினால் உள்ளக குருதிப்பெருக்கம் ஏற்பட்டு மிகவும் கடுமையான நிலையில் இருந்தான். இவனைக் காப்பாற்றுவதே கடினம் போல இருந்தது. அவளும் சக மருத்துவ போராளிகளும் நித்யனைக் காப்பாற்ற கடுமையாக பல வழிகளிலும் முயற்சித்துப் பார்த்தார்கள். அது பலனளிக்காமல் போய்விட்டது. நாட்டுக்காக தம்முயிரை ஈய்ந்த ஆயிரமாயிரம் மாவீரச் செல்வங்களின் வரிசையில் நித்யனும் மீளாத் துயில் கொண்டு விட்டான்.

நிலாவின் பள்ளிக் காதலும் முளையிலேயே கருகிவிட்டது. அவளும் நித்யன் விட்டுச் சென்ற பாதையில் போராட்டத்தின் தேவை கருதி களத்திற்குச் சென்று இப்போது இடுப்புக்குக் கீழே இயங்க முடியாத நிலையில், உறவுகளும் கைவிட்டு ஆதரவற்ற நிலையில் வாழ்நாளைக் கழித்துக்கொண்டு இருக்கிறாள்.

"மக்களுக்காக தங்களை உருக்கிய இந்த மெழுகுவர்த்திகளுக்கு விடிவு காலம் இனி எப்போது?"

-நிலா தமிழ்

# இன்னும் இது போல எத்தனையோ......

சிறுகதை

"வழுதி! என்ரை செல்லம்...!ஐயோ...! என்ரை ராசா.!"

கேட்பவர்களின் உணர்வுகளை அசைத்து உலுக்குவதாய் அழுகையினூடு கொஞ்சம் கொஞ்சமாய்த் துவங்கி அவளுடை உருக்கம் நிறைந்த கதறல் அந்த மருத்துவமனையே அதிரும்படி "வழுதி...!வழுதி...!" என்று உச்சம் தொட்ட போது, கொஞ்சம் கொஞ்சமாய் உணர்விழந்து அவள் மயங்கி சாய்ந்தாள்.

"இப்படித்தான் டொக்டர் அடிக்கடி நடக்குது, ஒருத்தரையும் அக்காக்கு நினைவில்லை எல்லாமே மறந்துட்டா. அது கூட பரவாயில்லை தான்பெற்ற மகளைக் கூட அவளுக்கு நினைவில்லை, தெரிவதுமில்லை"

"oh...I...see.. it's very pathetic... மகளுக்கு இப்ப எத்தனை வயசு?"

"பதின்மூன்று வயசாகுது...தாயின்ரை அரவணைப்பு தெரியாமலே அந்தப் பிள்ளை வளர்ந்திட்டுது...ரெண்டு பேரையும் இங்கை இலண்டனுக்கு எடுத்து ஒன்பது வருசமாகிப் போச்சு.... அக்காவைக் காட்டாத இடமேயில்லை. ....இப்பிடியே தான் இருக்கிறா....அப்பதான் என்னோட வேலை செய்யுற நண்பன் உங்களைப் பற்றிச் சொன்னான்.... என்ரை அக்காவை எப்படியாவது சுகப்படுத்துவீங்கள் எண்ட நம்பிக்கையோடை உங்களிட்டை வந்திருக்கிறன் டொக்டர்"

கையெடுத்து கும்பிட்டபடி முன்னால் நின்ற ரூபனிடம் அவர் சொன்னார்,

"பன்ரெண்டு வருசம் போய்ட்டுது..... இனி.....chances are rare. Anyway we'll try our best to cure the problem"

"அதுக்கு முதல், உங்கடை அக்காக்கு

இப்பிடி ஒரு மன நோய் எப்பிடி? ஏன்? ஏற்பட்டது என்ற பின்னணி தெரிய வேணும்.... என்ன மாதிரியான treatment மூலமா இந்தப் பிரச்சினையை சரி செய்யலாம் எண்டு decide பண்ண அது help பண்ணும்"

"சொல்லுறன் டொக்டர்...2009 சண்டையிலை வன்னிக்குள்ளை எங்கட சனம் பட்ட கொடுமையையளும் அவையள் ஆயிரக்கணக்கிலை செத்துப் போன கதையும் உங்களுக்கு தெரிஞ்சிருக்கும் தானே..."

"ஓம் சொல்லுங்கோ"

"என்ரை அக்காவும் அத்தானும் ரெண்டு பிள்ளைகளும் வன்னியிலை தான் இருந்தவை... அத்தான் ஒரு போராளி. அக்காவும் அவரும் ஒருவரை ஒருவர் விரும்பி கல்யாணம் செய்தவை"

* * *

எங்கென்றில்லாமல் எறிகணைகளும், விமானக்குண்டுகளும் விழுந்து வெடித்ததில் வன்னிப் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது. பயத்திலும், ஆற்றாமையிலும் பீறிட்ட கூக்குரல்கள் வான் தொட்டுக் கரைந்து போயின. ஓடுவதா? ஓடாமல் நிற்பதா? எது பாதுகாப்பு? எங்கே பாதுகாப்பு? தெரியவில்லை.

ஆனாலும் ஓடினார்கள். வஞ்சிக்கப்பட்ட ஒரு இனத்தின் அபலைகளாய்

உயிர்காக்கும் பரிதவிப்புடன் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்..

இருந்த ஒரே ஒரு வழி அந்த ஓடுதல் மட்டுமே. எந்த இலக்குமில்லாத ஓட்டம்! உயிர்களை பாது காக்கும் ஒரு நப்பாசை. குண்டடிபட்டு விழுந்து கிடந்த உடல்களை ஏறிமிதித்து ஓட நேர்ந்த போதும் ஓடுதல் நிற்கவில்லை. அதிகம்

- அஜந்தி -



ஏன்? கூட வந்த உறவுகள் குற்றுயிராக வீழ்ந்த நிலைகண்டும் - அது மிக நெருங்கிய உறவாக இருந்த போதும்-விநாடிப்பொழுது தாமதித்து , ஒரு துளி விழிநீர் சிந்தி காணிக்கை செலுத்த முடியாத சாபப்பட்ட மக்கள் கூட்டத்தின் ஓடுதல் ஓயவில்லை. தொடர்ச்சியான குண்டுவீச்சுக-ளின் காரணமாக, பதுங்கு குழிகளும் கொஞ்சம் கொஞ்சமாய் பயனின்றிப் போய்க் கொண்டி ருந்தன.

கமலினி என்ன செய்வாள்? விடுதலைக்கு சாசனம் எழுதிக் களமாடிக் கொண்டிருந்த கணவன் உயிரோடிருக்கிறாரா இல்லையா என்றெண்ணித் துடிப்பாளா? பயத்தில் உடல் நடுங்க அழுதபடி தன் கால்களை இறுக கட்டிப்பி டித்து நிற்கும் ஆறுவயசுப் பையன் வழுதியைத் தேற்றுவாளா? அல்லது இடுப்பிலிருக்கும் ஒன்பது மாதக் குழந்தை ஆதிரையின் பசி அழுகை போக்க வழி செய்வாளா?

எறிகணை அதிர்வுகள் ஏற்படுத்திய பீதியில் அயலவர்கள் எல்லாம் வெளியேறிப் போய் வெகு நேரமாகி விட்டது. நேரம் பிற்பகல் இரண்டு மணி யைத் தாண்டியிருந்தது

"எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் என்னை யும் பிள்ளைகளையும் பாக்க- ஏதாவது வழி சொல்ல- ஓடி வாறவர் இப்பவும் வருவார் " என்ற அவளுடைய நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து முற்றாக இல்லாமல் போனது. அது-வரைக்கும் வராத கணவன் இனியும் வரப்போவ தில்லை என்ற யதார்த்தம் நெஞ்சைப் பாரமாய் அழுத்தியது.

"அம்மாளாச்சீ!!... ..... அவரைக் காப்பாத்த-ம்மா...!"

மேலும் உக்கிரமடைந்த எறிகணை வீச்சுக்க-ளினால் அதிர்வும், புகை மண்டலமும் மேலும் ஒரு விநாடிப் பொழுது கூட அந்த இடத்தில் நிற்க கூடாது என்ற ஆபத்தான உண்மையைப் புரிய வைத்தன.

கைவசமிருந்த இரண்டு பிஸ்கட் பொட்டலங்க-ளில் ஒன்றைப் பிரித்து பிள்ளைகளின் கையில் ஆளுக்கொன்றாய் கொடுத்து, மீதியைப் பையில் போட்டு, இரண்டு போத்தல்களிலும் தண்ணீர் நிரப்பி எடுத்து, கையில் பையனைப் பிடித்த படி ஓடத் துவங்கினாள். ஓட்டத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாத பையன் ஓ.....!! வென்று சத்த-மாகக் கத்திக் கூக்குரலிட்டபடி இழுபட்டு ஓடிக் கொண்டிருந்தான். இடுப்புக் குழந்தை அதற்கு மேலாக வீரிட்டது. அவர்கள் ஓடிக்கொண்டிருந்த சில தூர இடைவெளிக்குள்ளாக முன்னும், பின் னும், பக்கங்களிலும், நிலம் அதிர்ந்து குலுங்கி கொண்டிருக்க பொழுது சாயத் தொடங்கியது. பாதையை மறைத்து புகைமண்டலம் சூழ்ந்தி ருந்தது. களைப்பு மேலிட, அடுத்து ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல், நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். பாதையோரம் ஒரு வீடு தெரிய,

"யார் வீடாய் இருந்தாலென்ன... கொஞ்ச நேரம் களைப்பாறலாம்" என்று அங்கே போன போது வீடு திறந்தபடி இருந்தது உள்ளே யாருமில்லை.

"அவர்களும் எங்கேயாவது ஓடியிருப்பார்கள்...."

வீட்டின் முன்புறமாக தரையில் உட்கார்ந்து பிள்ளைகளுக்கு பிஸ்கட்டும் தண்ணீரும் கொடு-த்து, கமலினியும் தண்ணீர் குடித்தாள்.

கொஞ்சம் ஓய்ந்திருந்த எறிகணைகளின் 'உய்ங்களும்' முன்னைவிட பலமடங்கு வீச்சுடன் மறுபடியும் தொடங்கியது. பயத்தில் குழந்தை அழத்துவங்க, வழுதி ஓ..!! என்று குரலெடுத்துக் கத்தினான்.

"அம்மா......எனக்கு பயமாயிருக்கம்மா!...அப்பா வருவாராம்மா? அப்பா எங்கை?"

என்ன செய்வாள் அவள்?

"கடவுளே! ஏன் இப்படி எல்லாம் நடக்குது? இந்தக் குழந்தையளின்ரை அழுகை கூட உனக்கு கேக்கேல்லையா ?...."

வேதனையின் உச்சத்தில், பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கமலினி

பெருங்குரலெடுத்துக் கதறி அழத் துவங்கினாள்.

”ஆண்டவா!... நான் என்ன செய்வன்? எங்கை போவன்? இந்த பிள்ளையளைக் காப்பாத்த ஒரு வழி சொல்லையா! கடவுளே !!!”

வீட்டின் பின் பக்கமிருந்து ஒரு பெண் குரல் சத்தமாய் கத்தி ”அங்கை ஆர் நிக்கிறியள்? ஷெல்லுகள் வந்து கொண்டிருக்கு, இங்கை ஓடி வாங்கோ. பங்கருக்குள்ளை இருக்கலாம் ...உடனே வாங்கோ....”

விநாடி தாமதமும் இல்லாமல் கமலினி எழுந்து ”ஓடி.. வாடா...” என்று மகனிடம் சொல்லி வீட்டின் பின்பக்கம் நோக்கி ஓடத் துவங்க கூவிக் கொண்டு வந்த எறிகணையொன்று வீதிக்கருகில் விழுந்து வெடித்துச் சிதறியது.

”ஐயோ...! அம்மா” என்று வழுதி அவளின் பின்னால் ஓடவும், எறிகணை சிதறல் ஒன்று இடுப்பில் பாய்ந்து, அவனைத் தூக்கி எறியவும் சரியாய் இருந்தது.

இரத்தம் வழிந்தோட, நிலத்தில் கிடந்து துடித்துக் கொண்டு இருந்தவனுக்கு அருகே ஓடிய கமலினி தான் பெற்றவனுக்கு இடுப்புக்குக் கீழே இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டிருந்த கொடுமையைக் கண்டாள். தன் தலையே பிளந்து சிதறிப் போனதான உணர்வில் உயிர் வலிக்க பெருங்குரலெடுத்து.

”வழுதீ....!என்ரை ராசா!!! ....!ஐயோ...! என்ரை செல்லமே...!” என்று உயிர் துடித்துக் கத்தினாள்.

”ஐயோ! கடவுளே....! என்ரை பிள்ளைக்கு என்ன நடந்தது.....! வழுதீ... வழுதீ...என்னைப் பாரடா....அம்மா வந்திருக்கிறன்ரா.....!”

”என்ன நடந்தது?”

மீண்டும் பங்கருக்குள் இருந்து அந்தப் பெண் குரல் பெரிதாய்க் கேட்டது.

என்ன சொல்லுவாள் இவள்? அல்லது என்ன செய்வாள்? அடி வயிற்றிலிருந்து கிளம்பிய பெரு நெருப்பில் அந்த தாய் துடியாய் துடித்தாள்.

தூக்கிச் சுமந்தோடிப் போய் சிகிச்சை செய்யும் சூழலுமில்லை. இரத்த வெள்ளத்தில் உயிர் துடித்துக் கொண்டிருந்த பிள்ளை. இடுப்பிலிருந்து தொடர்ந்து வீரிட்டழுது கொண்டிருந்தது மற்றப் பிள்ளை...... தொடர்ச்சியாக விழுந்து வெடித்துக் கொண்டிருந்த எறிகணைகள். அந்தப் பிள்ளைக்காக அழுவாளா? இந்த பிள்ளையைக் காப்பாற்ற பங்கருக்குள் ஓடுவாளா.?

’நடக்கிறது நடக்கட்டும்’

குழந்தையை அணைத்தபடி உட்கார்ந்தாள். கண்கள் சொருகி இறுதி நிமிடங்களில் கிடந்த



மகனின் தலைதடவி ”வழுதீ...!அம்மா இருக்கிறன்ரா.. ஒண்டும் பயமில்லை கண்ணா!......அம்மா இருக்கிறன்ரா......”

குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

“நாங்களும் உன்னோடை வாறம், பயப்பிடாதை செல்லம்....”

எறிகணைகளில் ஒன்று தங்கள் மீது விழட்டும் என்ற தீர்மானத்துடன் இருந்த போதும், வீழ்ந்து வெடித்த எறிகணைகளில் ஒன்று கூட சில நிமிடங்கள் கூட அந்த இடத்துக்கு வரவில்லை.

குழந்தை மறுபடி வீச்செடுத்து அழத் துவங்கியது. அப்போதுதான் மிக அருகில் வந்து நின்ற ஒரு உருவம் கமலினியின் கையைப் பிடித்து தூக்கி இழுத்து எழும்ப வைத்தது.

”எழும்பு பிள்ளை..... ஷெல்லுகள் வந்து கொண்டிருக்கு....முதல்ல வா..பங்கருக்கை போவம். பிறகு.... எல்லாம்...பார்ப்பம்...”

இவர்களை பங்கருக்குள் வரும்படி முதலில் குரல் கொடுத்த அதே பெண்தான்!

”ஐயோ ..! என்ரை பிள்ளை....!” நிலத்தில் குற்றுயிராய்க் கிடந்து துடித்துக் கொண்டிருந்த பிள்ளையைக் காட்டி அவள் ‘ஓ....’ வென்று கத்தினாள்.

”அப்ப? இதுகும் உன்ரை பிள்ளைதானே....?

இதையாவது காப்பாத்தப் போறியா அல்லது இதையும் பறிகுடுக்கப் போறியா? வா என்னோடை" என்று சற்று கடுமையான குரலில் சொல்லிக் கொண்டிருக்க- மீண்டும் ஒரு எறிகணைக்கூவல். அவசர அவசரமாய் ஓடி பங்கருக்குள் இறங்கிய போது, எங்கோ மிக அருகில் வெடித்த குண்டின் அதிர்வை உணர முடிந்தது.

இரவு முழுக்க தொடர்ந்து எறிகணை வீச்சுக்கள், மறுநாள் விடிந்தவுடன் தொடங்கிய விமானக் குண்டு வீச்சுக்கள். எல்லாம் ஓய்ந்த போது காலை மணி பத்தரைக்கு மேல் ஆகியிருந்தது. கமலினி பங்கரை விட்டு வெளியே ஓடினாள். அடுத்த நிமிடம்

"வழுதீ ....!வழுதீ .... ஐயோ....!என்ரை ராசா....!"

பங்கருக்குள் இருந்தவர்களின் உயிர்களை உலுக்கி எடுத்த வலி மிகுந்த ஒரு தாயின் கதறல்! எல்லோரும் வெளியே ஓடினார்கள். அங்கே இறுகிப் போய்விட்ட இரத்தவிரிப்பில், உயிர் பிரிந்து கிடந்தவரின் உடலெங்கும் எறு ம்புகள் ஊர்ந்தபடி இருக்க, மெல்லிய முணுமுணுப்புடன் இலையான்களின் கூட்டம் மொய்ப்பதும் விலகுவதுமாய் பறந்து கொண்டிருந்தன.

அப்போது மயங்கி சாய்ந்த கமலினி அதன் பிறகு புத்தி பேதலித்து மனநோயாளியாக மாறிப் போனாள்.

* * *

"இது தான் டொக்டர் நடந்தது...அக்காவையும் குழந்தையாய் இருந்த ஆதிரையையும் வவுனியா அகதி முகாமிலை நான் பொறுப்பு எடுக்கிறவரைக்கும். அந்தக் குடும்பந்தான் தங்கடை கஷ்டத்தையும் பாக்காமல் இவைக்கு துணையாய் இருந்தது. அந்தக் குடும்பத்துக்கு என்ரை வாழ்க்கை முழுக்க நான் நன்றியோடை இருக்க வேணும்." அன்று மாலை பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய ஆதிரை ரூபனிடம் கேட்டாள்.

"மாமா.....!அம்மாவை பாத்த பிறகு டொக்டர் என்ன சொன்னவர்?"

"பன்னெண்டு வருசமா மாறாம இப்படியே இருக்கிறபடியா கொஞ்சம் கஷ்டம்தான் என்று சொன்னார் ஆனா."

"ஆனா ...என்ன மாமா?" ஆதிரையின் குரலில் ஏக்கமும், ஆதங்கமும் தெரிந்தது.

"இந்த மாதிரி ஒரு மனநோய் எப்பிடி வந்தது...? அவவின்ரை மனதைப் பாதிச்ச ஏதோ பெரிய விசயம் தான் இதுக்கு காரணமாயிருக்கும்...

அது என்ன எண்டு தெரிஞ்சால், அதுக்குரிய மாதிரி என்ன செய்யலாம் எண்டு பாக்கலாம் எண்டு டொக்டர் சொன்னார்:"

"அப்ப நீங்க என்ன சொன்னீங்க மாமா?"

"இதுக்கும் அந்த சாரதா ஆன்டிக்குத்தான் நாங்கள் நன்றி சொல்ல வேணும்.... ....அண்டைக்கு இரவிரவாய் பங்கருக்குள்ளை இருந்து அழுதபடியே ஒண்டும் விடாமல் எல்லாக் கதையும், உன்ரை அம்மா அந்த ஆன்டிக்கு சொல்லியிருக்கிறா."

"..... ஓ ... "

" நல்ல தமிழில் பேருகள் வைக்க வேணுமென்று உங்கள் ரெண்டு பேருக்கும் அப்பா தான் பேர் வைச்சவர் எண்டது தொடக்கம் ...சந்தோசமா வாழ்ந்த காலங்கள்...சண்டையில் நின்ற உன்ரை அப்பா ஒருக்கா என்றாலும் வருவாரெண்டு பாத்துப் பாத்து கடைசி நிமிசம் வரைக்கும் நிண்டது... அதுக்கு பிறகு ஷெல் அடிக்கை நிற்க முடியாமல் வெளிக்கிட்டு ஓடி வந்தது. ரெண்டு காலும் வெட்டப்பட்டு உன்ரை அண்ணா இரத்தப் பெருக்கில் கிடந்தது. கதறிக் கதறி அழுது உன்ரை அம்மா சொன்ன எல்லாக் கதையும் அந்த ஆன்டிதான் எனக்கும் சொன்னா"

" ............................ " எதுவுமே பேசாமல் கண்ணீர் வழிந்தோடியபடி நின்ற ஆதிரை சிறிது நேரம் கழிய ரூபனிடம்..

"பங்கருக்கை இருந்து அழுதழுது எல்லாக் கதையும் சொல்லேக்கை அம்மா நல்ல நினைவோடைதானே மாமா இருந்திருக்கிறா...? பிறகு ஏன் இப்பிடி வந்தது....? ஒரு வேளை அதையே யோசிச்சு யோசிச்சு மனம் பாதிக்கப் பட்டிருக்குமோ?"

'ஆருமில்லாது அனாதைபோலை, தான் பெத்தவன் நிலத்திலை கிடந்த கோலமும், துர்வாடை வீசிக் கொண்டிருந்த அந்த உடம்பிலை எறும்புகளும், இலையான்களும் மொய்த்துக் கொண்டிருந்த நெஞ்சு வெடிக்கும் கொடூரக் காட்சியுங் கண்டு தாங்க முடியாமல், கதறிக் கொண்டு மயங்கி விழுந்த உன்ரை அம்மா அதுக்கு பிறகு தான் இந்த மீளாத மனநோய்க்கு ஆளாகிப் போனா எண்ட கதையை உன்னட்டை நான் எப்பிடிச் சொல்லுவன் ஆதிரை? வேண்டாம் அந்த கொடுமையை நீ அறிய வேண்டாம்.'

"அது தானடா எனக்கும் விளங்கல்லே ...பாப்பம், டொக்டரிட்டை எல்லாம் விளக்கமாய் சொல்லியிருக்கிறன்.....சுகப்படுத்தி விடுவார் என்ற நம்பிக்கையோட இருப்பம்"

# சிட்டுக்குருவி



சிட்டுக்குருவியே சிட்டுக்குருவியே
சிறகடித்து பறந்திடும்
சிட்டுக்குருவியே
வண்ணக்கனவுகளுடன்
வானில் நீ பறப்பது போல
எண்ணில்லாக் கனவுகளுடன்
இதயவானில் பறந்தேன்
ஆற்றோர மணல் எடுத்து
அழகான வீடு கட்டியதை
மழையில் கரைய விட்டது –போல
என் கனவுகளும்
கலைந்து போனதுவே
சுகமான சுமையாக
சுமந்தவர்கள் இன்று
இலக்கின்றி இருப்பதனால்
இயலாமை எனக்குள்
இமயமாய் வளர்கிறது
உயிர்கொடுத்து வளர்த்த
உறவுகளின் பிரிவும்
உறவுகளின் சொற்கள் தரும் வலியும் – என்
இதயத்தில் அம்பாக பாய்ந்து
இரத்தக் கண்ணீர் வடிக்கிறது
உலகத்தின் முன் நடிப்பதால்
மனவலி நாளும் நாளும்
கூடி பொறை விழுந்த மரம் போலானேன்
என் கவலை கண்டு
கடவுளும் கண்திறக்கவில்லை
உள்ளம் உடைந்த நான்
எங்கு செல்வேன் சிட்டுக் குருவியே
முடியவில்லை
வாழ்வை முடிக்கவும் தெரியவில்லை
நடைப்பிணமாக நாளும் வாழ்கிறேன்
கனவுகள் சுமந்தனால்.....

**கலை**
**(இலண்டன்)**

# சுயம் காக்க திடம் கொள்வோம்

-செந்தழல்-

இன்றும் நினைவிருக்கிறது
சின்னவளாக நான்
வாழ்ந்ததை.
அந்த வாழ்க்கையில்
உயிர்ப்பு இருந்தது
வாழ்வதற்கான பிடிப்பு
இருந்தது.

பக்கத்து வீட்டுச் சின்னன்கள் எல்லாம்
சேர்ந்து கள்ளன்
பொலிஸ் விளையாடினதும்
சிறு வீடு கட்டி மகிழ்ந்ததுவும்
கிட்டிப் புல்லு அடித்து
நெற்றியில் அடிபட்டு
அழுததுவும்
புழுதி மண்ணில்
புரண்டு படுத்ததுவும்



ஊர்க் கோயில் கொடியேறினால்
ஊரே கோலாகலம்
குஞ்சிஐயா, குஞ்சிஅம்மா
ஆசையப்பா, ஆசையம்மா
நல்லாத்தை, நல்லம்மா,
சீனியாத்தை, சீனியம்மா
உறவு சொல்ல நா இனிக்கும்

கல்யாண வீடு என்றால்
ஒரு கிழமைக்கு முன்னுக்கே
எல்லோரும் கல்யாண
வீட்டிலை

பலகாரம் சுட, பந்தல் போட
கல்யாணத்துக்கு சொல்லவென்று

பனங்கிழங்கு, ஒடியல் பிட்டு
பனாட்டு, பாணிப் பனாட்டு
தினை, வரகு, குரக்கன் பிட்டு
அந்தக் காலத்துக்
திறம் சாப்பாடு

நெஞ்சை நிமிர்த்தி
இறுமாந்து நின்ற
பனைமரங்களும்
செல்வம் அள்ளித் தந்த
வயல் நிலங்களும்
களை பிடுங்கி, நிலம் உழுது
துலாமிதித்து, பயிர் செய்த
தோட்ட நிலங்களும்

இவை அனைத்துமே
பறிக்கப்படுகிறது!
எம் கூட்டு உறவு
சிதைக்கப்படுகிறது!
இளம் தலைமுறை
நடைப்பிணங்களாக்கப்
படுகின்றனர்!
தமிழ் இனத்தின் நிலம்
பண்பாடு பாரம்பரியம்
அழிக்கப்படுகின்றது!

எம் இனத்தின் இந்நிலையை
ஒரு கணம் சந்திப்போம்.
இளையவர்களுக்குப்
புரிய வைப்போம்.
எம் மண்ணில் வாழும்
சுகத்தைக் காட்டுவோம்.
எம் மண்ணின் இருப்பைக் காக்கத்
திடம் கொள்வோம்.

